


சூரியன் வானத்தின் உச்சியில் உட்கார்ந்து கொண்டு, நெருப்புத்துண்டங்களை வீசிக் கொண்டிருக்க, விவேக்கும், விஷ்ணுவும் ஒரு கேஸ் விஷயமாய் மதுராந்தகம் வரை போய்விட்டு காரில் சென்னையை நோக்கி திரும்பிக் கொண்டிருந்தார்கள். சாலையின் இரண்டு பக்க பொட்டல் வெளியிலும் ரியல் எஸ்டேட்காரர்களின் உபயத்தால் செங்கல் உடம்புகளோடு புதுக் கட்டிடங்கள் முளைத்திருந்தன. விஷ்ணுவின் கையில் நான்கைந்து வெள்ளரிப் பிஞ்சுகள். கடைவாயில் ஒன்று அரைபட்டுக் கொண்டிருந்தது. கார்

இரத்தத்தைப் பார்த்தால் சிலருக்கு மயக்கம் வரும். இதற்கு மருத்துவ உலகம் வைத்த பெயர் ஹெமடோஃபோபியா (Hematophobia). ஆண்களைக் காட்டிலும் பெண்களிடம் இந்த ஃபோபியா அதிகம்.

ஏதோ ஒரு பாக்கத்தை விர்ர்ர்ரென்று கடந்து கொண்டிருக்க, விஷ்ணு கூப்பிட்டான்.

''பாஸ்...''

''ம்...''

''ரெண்டு செட் காவி ட்ரஸ் தைக்க என்ன செலவாகும் பாஸ்?''

''இப்ப எதுக்காக இந்தக் கேள்வி...?''

''பாஸ்...! நான் சொல்லப் போறதைக் கேட்டுட்டு நீங்க ஃபீல் பண்ணக் கூடாது...''

''சும்மா சொல்லுடா...!''

''பாஸ்! நான் சாமியாராகி இமயமலைப் பக்கம் போயிடலாம்னு இருக்கேன்...''

''ஏண்டா...?''

''நாட்டு நடப்பு எதுவுமே சரியில்லை பாஸ்! கோபமா வருது. காவேரியில் தண்ணி வர்றது இல்லை. ஐஸ்வர்யா ராய்க்கு முப்பது வயசாகியும் இன்னும் கல்யாணமாகலை. என்னோட கனவுக் கன்னியாய் இருந்த சிம்ரன் பத்து நாளைக்கு முன்னாடி ஒரு குழந்தைக்கு மம்மியாயிட்டாங்க. 60 கோடி ரூபாய் போபர்ஸ் ஊழலை விசாரிக்க நம்ம அரசாங்கம் 150 கோடி ரூபாய் செலவு பண்ணியிருக்காங்க. டெண்டுல்கரும், கங்குலியும் இப்பல்லாம் ரெண்டு ரன்னுக்கு மேல எடுக்கிறது இல்லை. டென்னிஸ் சானியா மிர்சாவை போன வாரம் ஏர்போர்ட்ல



பார்த்தேன். பார்த்தும் பார்க்காதது போல போயிட்டாங்க. சென்னை வெயில் தாங்க முடியலை பாஸ்... பச்சைத் தண்ணியில் குளிச்சிட்டிருக்கும் போதே வேர்த்துக் கொட்டுது. இவ்வளவு பிரச்னைகளோடு இந்த சம்சார வாழ்க்கையைத் தொடரணுமா பாஸ்...? இனிமே ஒரு வேளை சாப்பாடு தான்... அதுவும் வெஜிடேரியன் மட்டும்...''

வேகமாய்ப் போய்க் கொண்டிருந்த கார் ரோட்டோரமாய் ஒதுங்கி ஒரு மரத்துக்குக் கீழே போய் நின்றது.

''என்ன பாஸ்... காரை நிறுத்திட்டீங்க...?''

''நீ சாமியாராகப் போறது உறுதிதானே...?''

''இதிலென்ன பாஸ் சந்தேகம்...? இந்த விஷ்ணு ஒரு தடவை சொன்னா ஆயிரம் தடவை சொன்ன மாதிரி...''

''சரி... நீ காரிலேயே உட்கார்ந்திட்டிரு... நான் பதினைஞ்சு நிமிஷத்துல வந்துடறேன்...''

''பாஸ்... எங்கே போறீங்க...?''

''அதோ...!'' விவேக் கை நீட்டிய பக்கம் விஷ்ணு பார்வையைக் கொண்டு போனான்.

வண்ணக் குடைகளோடு ஐஸ்க்ரீம் பார்லர் ஒன்று கண்களுக்குத் தட்டுப்பட்டது. விவேக் சொன்னான்.

''இந்த ஐஸ்க்ரீம் பார்லர் ரொம்பவும் ஃபேமஸ். முந்திரி, பாதாம்னு போட்டு 'கஸாட்டா ஐஸ்க்ரீம்'ன்னு ஒண்ணு விக்கிறான். சூப்பராயிருக்கும். நான் போய் சாப்டுட்டு வந்துடறேன்...''

''பா... பாஸ்...''

''பெங்களூர் ரமணியம்மாள் பாடிய பக்திப் பாடல் காஸட் ஒண்ணு டாஷ்போர்டில் இருக்கு... போட்டு கேட்டுட்டிரு...''

''பாஸ்...! இந்த இளம் சாமியாரின் கடைசி ஆசை ஒரு 'கஸாட்டா ஐஸ்க்ரீம்' சாப்பிடணும்கிறதுதான். நானும் வர்றேன்...''

விவேக் சிரித்துக் கொண்டே ஏதோ சொல்ல முயன்ற விநாடி அவனுடைய செல்ஃபோன் ரிங்டோனை

வெளியிட்டது. எடுத்து டிஸ்ப்ளேயில் அழைப்பது யார் என்று பார்த்தான்.

ரூபலா!

''என்ன ரூபி...?''

''இப்ப நீங்க எங்கே இருக்கீங்க...?''

''ஹைவேஸ் ரோட்ல ஒரு ஐஸ்க்ரீம் பார்லர்க்குப் பக்கத்துல. ஏன் ரூபி... என்ன விஷயம்...?''

''அரை மணி நேரத்துக்கு முன்னாடி நம்ம வீட்டுக்கு ஒரு டெலிஃபோன் கால் வந்தது. நான் ரிஸீவரை எடுத்து 'ஹலோ'ன்னு குரல் கொடுத்தேன். பதிலுக்கு யாரும் குரல் கொடுக்கலை. அதுக்குப் பதிலாய்...'' மறுமுனையில் பதட்டத்தோடு- ரூபலா பேச்சை நிறுத்த, விவேக் கேட்டான்.

''அதுக்குப் பதிலாய்...?''

''ஒரு பாட்டுப் பாடினாங்க! ஆண் குரல்...''

''என்ன பாட்டு...?''

''ஜன கன மண...''

''நேஷனல் ஆன்த்தமா...?''

''ஆமாங்க...''

''பாட்டு மட்டும் தானா...? யாரும் எதுவும் பேசலையா?''

''பேசலை...! தேசிய கீதம் முடிஞ்சதும் ரிஸீவரை வெச்சுட்டாங்க. அதுக்கப்புறம் ஒரு பத்து நிமிஷம் கழிச்சு மறுபடியும் ஃபோன் மணி அடிச்சது. போய் ரிஸீவரை எடுத்து 'ஹலோ'ன்னு குரல் கொடுத்தேன். மீண்டும் அதே 'ஜனகனமண' பாட்டு...''

''அந்த பாட்டை டேப் பண்ணினியா...?''

''இல்லீங்க...! எனக்கு இருந்த டென்ஷன்ல அது தோணலை...''

''சரி... மறுபடியும் ஃபோன் வந்து அந்தப் பாட்டு கேட்டா டேப் ரிக்கார்டர்ல பதிவு பண்ணி வை... ரூபி...''

''ம்...''

''பயப்படாதே...! யாரோ விளையாடறாங்கன்னு



நினைக்கிறேன்...''

''நீங்க சென்னை வந்துசேர இன்னும் எவ்வளவு நேரமாகும்?''

''எப்படியும் ரெண்டு மணி நேரமாயிடும். நீ தைரியமாயிரு. மறுபடியும் அந்த ஃபோன் கால் வந்தா எனக்கு ஃபோன் பண்ணு...''

''லேட் பண்ணாமே சீக்கிரமாவே வாங்க...'' ரூபலா ரிஸீவரை வைத்துவிட, விவேக் செல்ஃபோனை யோசனையோடு அணைத்தான். விஷ்ணு கேட்டான்.

''என்ன பாஸ்...! டி.வி. சீரியல் பார்த்த மாதிரி எப்படியோ ஆயிட்டீங்க...?''

''டேய்...! கஸாட்டா ஐஸ்க்ரீம் கேன்ஸல்...''

''ஐயய்யோ! என்ன பாஸ் இது...? ஐஸ்க்ரீமை தியாகம் பண்ற அளவுக்கு அப்படியென்ன கெட்ட செய்தி பாஸ்...?''

''கார்ல ஏறு... சொல்றேன்...''

''எனக்கு நேரமே சரியில்லை பாஸ். உப்பு விக்கப் போனா மழை பெய்யுது... மாவு விக்கப் போனா காத்தடிக்குது. ரெண்டு செட் காவி ட்ரஸ் ரெடி பண்ணிட வேண்டியதுதான்...'' விஷ்ணு புலம்பிக் கொண்டே காரில் ஏறி உட்கார- பின்பக்கம் அந்த வாகன சத்தம் இரைச்சலாகக் கேட்டது.

விவேக் திரும்பிப் பார்த்தான்.

போலீஸ் ஜீப்பொன்று டயர்களை தேய்த்தபடி புழுதி பறக்க வந்து நின்றது.

''பாஸ்...! நம்ம ஜாதி...''

ஜீப்பிலிருந்து இளவயது இன்ஸ்பெக்டர் ஒருவர் கீழே இறங்கினார். நேம் பேட்ஜ் 'சிற்றரசு' என்று சொல்ல, நான்கைந்து கான்ஸ்டபிள்கள் தொடர்ந்து கீழே குதித்தார்கள்.

சிற்றரசு, விவேக்கைப் பார்த்ததுமே வேக நடையில் ஓடிவந்து சல்யூட் அடித்து தளர்ந்தார்.

''ஸ... ஸார்...''

விவேக் புன்னகைத்தான்.

''என்ன... ஐஸ்க்ரீம் சாப்பிட வந்தீங்களா?''

''இல்ல ஸார்...! அரைமணி நேரத்துக்கு முந்தி இந்த ஐஸ்க்ரீம் பார்லரிலிருந்து ஒரு ஃபோன்கால் வந்தது. அது சம்பந்தமாய்... ஒரு என்கொய்ரி பண்ணத்தான் வந்தோம்...''

''எதுக்காக என்கொய்ரி...?''

''ஐஸ்க்ரீம் பார்லர்க்குப் பின்னாடி ஒரு பொட்டல் வெளி இருக்கு ஸார். அந்தப் பொட்டல் வெளியில் ஒரு புதர் மறைவில் கருகிப் போன மனிதக் கால் ஒன்று கிடக்கிறதாக ஃபோன் பண்ணி சொன்னாங்க ஸார்...''

''என்னது...! கருகிப் போன மனிதக் காலா...?''

''ஆமா ஸார்... அதுவும் ஒரு பெண்ணோட காலாம்...''

விவேக்கின் புருவங்கள் முடிச்சிட்டுக் கொண்டன.

''பெண்ணோட காலா...? காலே கருகிப் போயிருக்குன்னு சொல்றீங்க...! ஃபோன் பண்ணினவங்க எப்படி அது ஒரு பெண்ணோட கால்ன்னு உறுதியா சொன்னாங்க...?''

''கருகிப் போன கால்ல கொலுசு ஒண்ணு உருகிப் போய் ஒட்டிக்கிட்டு இருக்காம் ஸார்...''

''[illegible]...?''

''ஆமா... ஸார்...''

''வாங்க... பார்த்துடலாம்...''

விவேக், இன்ஸ்பெக்டர் [illegible] ஐஸ்க்ரீம் பார்லரை நோக்கி நடக்க ஆரம்பித்தான். பார்லரில் கூட்டம் இல்லை. இரண்டொரு காதல் ஜோடிகள் மட்டும் மரநிழலில் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து ஒரே ஒரு ஐஸ்க்ரீம் கப்போடு காதலை வளர்த்துக் கொண்டு இருந்தார்கள்.

போலீஸ் யூனிஃபார்மைப் பார்த்ததும் பார்லரில் இருந்த ஒரு நபர் வேகவேகமாய் வெளிவந்து எதிர்ப்பட்டார்.

''வாங்க... ஸார்...''

''ஃபோன் பண்ணினது...?''



''நான்தான் ஸார்...! கம்... இஸ் சைட் ஸார்...'' பார்லர்க்கு இடது கைப் பக்கமாய் கூட்டிக் கொண்டு போனான்.

''அதை மொதல்ல பார்த்தது யாரு...?''

''பார்லர்ல வேலை செய்யற பையன் ஸார். யூரின் பாஸ் பண்றதுக்காக அந்தப் பக்கம் போயிருக்கான். ஒரு நாய் அதை வாய்ல கவ்விக்கிட்டு அந்தப் பக்கமா ஓடி வந்திருக்கு. பையன் கல் எடுத்து அடிக்கவும் நாய் அதை போட்டுட்டு ஓடிப் போயிருக்கு... பையன் பார்த்துட்டு வந்து என்கிட்டே சொன்னான். நான் போய்ப் பார்த்தேன். உடனே உங்களுக்கு தகவல் கொடுத்தேன்...''

பொட்டல்வெளியில் காய்ந்து போன புற்களை மிதித்துக் கொண்டு நடந்தார்கள்.

''உம் பேர் என்ன...?''

''டொமினிக் ஸார்...''

''பார்லர் உன்னோடதுதானா...?''

''ஆமா... ஸார்... ரெண்டு வருஷமா நடத்திட்டு வர்றேன். சொந்த ஊர் நாகர்கோவில்... அதோ... அந்த புதர்தான் ஸார்...''

புதரை நெருங்கினார்கள்.

'L' ஷேப்பில் அது கிடந்தது. சோளக் கதிரை சுட்ட தினுசில் அந்த மனிதக் கால் கறுப்படித்து தெரிந்தது. கணுக்காலில் நெருப்பின் காரணமாய் உருக்குலைந்து போன கொலுசு சதையோடு ஒட்டியிருந்தது.

விவேக் பக்கத்தில் நின்றிருந்த ஒரு கான்ஸ்டபிளின் கையில் இருந்த லாட்டியை வாங்கி அந்தக் காலை மெல்லப் புரட்டிப் போட்டான். மொய்த்திருந்த எறும்புகள் நாலாபக்கமும் கலைந்து ஓடியது.

''விஷ்ணு...!''

''பாஸ்...''

''ஃபாரன்ஸிக் பீப்பிள் வர்றதுக்கு முன்னாடி கொஞ்சம் 'சீன் ஆஃப் க்ரைம்' பார்த்துடு... நூறு மீட்டர் சுற்றளவுக்கு பார்த்தா போதும்...''

''எஸ்... பாஸ்...'' விஷ்ணு சொல்லிவிட்டு நகர்ந்த

விநாடி-

விவேக்கின் செல்ஃபோன் அழைத்தது. எடுத்துப் பார்த்தான். ரூபலா.

''என்ன ரூபி...?''


''மறுபடியும் ஃபோன் வந்தது...''

'' 'ஜனகனமண' பாடினானா...?''

''இல்லை...''

''பின்னே...?''

'' 'தாயின் மணிக்கொடி பாரீர்...'ன்னு பாடினான்...''



பெண்கள் உதட்டுக்குப் பூசும் லிப்ஸ்டிக்கில் என்னென்ன பொருள்கள் அடங்கியுள்ளது என்ற கேள்வியை யாராவது உங்களிடம் கேட்டால் ரசாயனப் பெயர்களுக்காக யோசிக்க வேண்டாம். அதில் கலந்துள்ள இரண்டு பொருள்களுமே சாதாரண பொருள்கள் தான். 1) மெழுகு, 2) விளக்கெண்ணெய்.

இந்த விநாடியிலிருந்து கொலைகாரன் என்ற பெயர் என்னோடு ஒட்டிக் கொண்டு விட்டது.

ஆத்திரத்தில் உயிரைப் பறித்தாலும் சரி, சாவகாசமாய் யோசித்து திட்டம் போட்டு உயிரை எடுத்தாலும் சரி... சட்டம் அதற்கு இட்ட பெயர் கொலை. நான் ஆத்திரத்தில் செய்த கொலை இது.

பின் மண்டை முழுவதும் ரத்தக்களரியாய் தெரிய, விழிகள் விட்டத்தை வெறிக்க, கஜபதி மல்லாந்து கிடந்தான். குளிர்க்காக அணிந்து இருந்த கறுப்பு உல்லன் கோட்டில் இரண்டு ரத்தத் துளிகள் பவள மணிகளாய் உருண்டு உலராமல் நின்றிருந்தன. அந்த ராத்திரி வேளையிலும் ரத்த வாடையை மோப்பம் பிடித்துக் கொண்டு ஒரு ஈ கஜபதியைச் சுற்றிச் சுற்றி வந்தது.

சரியாய் இரண்டு மணி நேரத்துக்கு முன்பு - கஜபதி என்



வீட்டுக்கு வந்திருந்தான். பைக் உதறியபடியே நிற்க, அதன் மேல் உட்கார்ந்தபடி பேசினான்.

''தினேஷ்! என்னடா... பண்ணிட்டிருக்கே...?''

நான் டர்க்கி டவலால் உடம்பை போர்த்திக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்தேன். மார்கழிக் குளிர் தெருவில் ஊசிமுனைகளாய் இறங்கிக் கொண்டிருந்தன.

''இப்பத் தாண்டா... ஆபீஸிலிருந்து வந்தேன்...''

''மணி எட்டாகுது...''

''என்ன பண்றது...! ஆபீஸில் ஆடிட்டிங்...! டெல்லியிலிருந்து ஒரு க்ரூப் வந்து உட்கார்ந்துட்டாங்க. பழைய குப்பையையெல்லாம் கிளறி மண்டையைக் காய வெச்சுட்டாங்க. ஹைஸ்கூல் பையன் மாதிரி இருக்கான் அந்த ஆடிட்டர். என்னமா மிரட்டறான் தெரியுமா...? சின்னச் சின்ன தப்பையெல்லாம் பெரிசு பண்ணி வெறுப்பேத்திட்டான். தலைவலி மண்டையைப் பொளக்குது. ரெண்டு மாத்திரை உள்ளே போட்டாச்சு... தலைவலி இன்னமும் அப்படியே திம்னு உட்கார்ந்துட்டிருக்கு...''

''கவர்ன்மெண்ட் உத்யோகம்ன்னா அப்படித்தான் இருக்கும். என்னை மாதிரி பிசினஸ் பண்ணினா எவனுக்கும் பயப்பட வேண்டியது இல்லை. சரி... சரி... கிளம்புடா...''

''எங்கே...?''

''என்னோட வீட்டுக்கு...''

''எதுக்கு...?''

''சொன்னாத்தான் வருவியா...?''

''அது இல்லடா கஜபதி... தலைவலியாய் இருக்கு. அதான்...''

''தலைவலி தானே...! அது காணாமே போயிடும். வா... கைவசம் மருந்து இருக்கு...''

''மருந்தா...?''

''ம்... 'ரெட் ஜேஸ்மின்' விஸ்கி கேள்விப்பட்டு இருக்கியா...?''

''ம்... இங்கிலீஷ் புத்தகங்கள்ல விளம்பரம் பார்த்து

இருக்கேன். ஒரு பெக் ஐயாயிரமாமே...?''

''அந்த 'ரெட் ஜேஸ்மின்' விஸ்கி ஒரு பாட்டில் என்கிட்டே இருக்கு...''

நான் விழிகளை விரித்தேன். இருதயம் படபடத்தது.

''நிஜமாவா...?''

''இதோ... பார்ரா... தினேஷ்...'' கஜபதி சொல்லிக் கொண்டே பைக்கின் கிட்டைத் திறந்து பிங்க் நிறத்தில் இருந்த அந்த குடுவை பாட்டிலை எடுத்தான். ''பாட்டிலைப் பார்க்கும்போதே கிக் வரலை...?''

''டேய்...! இது எப்படிடா உனக்கு கிடைச்சுது?''

''அதைப் பத்தியெல்லாம் கேட்காதே... நீ வர்றியா... இல்லையா...?''

நான் மௌனமாய் நின்றேன். மனசுக்குள் ஏதோ ஒன்று குறுகுறுத்தது. ஆறு மாதங்களுக்கு முன்பு வரை நானும் விதவிதமாக விஸ்கி பாட்டில்களோடு உறவாடியவன் தான். சனி, ஞாயிறு இரவுகளில் விடிய விடிய கஜபதியின் வீட்டில் போதையில் மிதந்தவன்தான். கடந்த ஆறு மாத காலமாய் அதையெல்லாம் தொடுவது இல்லை. காரணம்... என் மனைவி ரேகாவின் மரணம். என்னோடு சந்தோஷமாக குடும்பம் நடத்தியவள் திடீரென்று ஒரு நாள் விடியற்காலையில் மண்ணெண்ணெயில் குளித்து நெருப்புப் பந்தாய் ஒளிவிட்டு சில நிமிஷங்களில் கரிக்கட்டையாய் மாறிப் போனாள்.

'தற்கொலைக்குக் காரணம்?'

போலீஸார் கேட்ட கேள்விக்கு இந்த நிமிஷம் வரை என்னால் பதில் சொல்ல முடியவில்லை. அவளுடைய திடீர் மறைவுக்குப் பின் மூன்று மாதம் வரைக்கும் தாடி வளர்த்துக் கொண்டு ஆபீஸுக்குப் போகாமல் நாற்காலிக்கு சாய்ந்து உட்கார்ந்து மோட்டுவளையைப் பார்த்துக் கொண்டு- நேரத்துக்கு சாப்பிடாமல் ஒரு ஜடமாய் நாட்களை கழித்துக் கொண்டிருந்தேன். அதற்குப் பிறகு நண்பர்களும், உறவினர்களும் என் மீது படையெடுத்து என்னை தத்துவ மழையில் நனைத்து



உடைந்து போயிருந்த மனதை ஒட்ட வைத்து பழைய தினேஷாக என்னை மாற்றினார்கள்.

கஜபதி என்னுடைய தோளைத் தட்டினான்.

''என்னடா யோசனை...?''

''அது... வந்து...''

அவன் சிரித்தான். ''எனக்குத் தெரியும்...! உனக்கு உன்னோட மனைவி ரேகாவோட நினைப்பு வந்துடுச்சுன்னு நினைக்கிறேன். இதோ பார் தினேஷ்...! நாம எல்லாருமே ஒரு நாளைக்கு இறக்கப் போறவங்கதான்... சிலர்க்கு அந்த மரணம் முன்னாடி வரும். சிலர்க்கு பின்னாடி வரும். ஒருத்தருடைய மரணத்துக்காக நாம வருந்தலாமே தவிர அதையே நினைச்சு கவலைப்படக் கூடாது. போனவங்களைப் பத்தி நினைச்சு உருகிட்டிருந்தா நம்ம உடம்புதான் கெடும். நீ என்கூட குடிக்க வரலைங்கிறதுக்காக நான் இதைச் சொல்லலை. மனப்பூர்வமா சொல்றேன்... உனக்கு இஷ்டமிருந்தா வா... இல்லேன்னா வேண்டாம்... நான் நம்ம ஃப்ரண்ட்ஸ் வேற யாரையாவது கூட்டிட்டுப் போயிடறேன். எனக்கு வேண்டியது ஒரு பார்ட்னர். அவ்வளவுதான்...''

''நானே... வர்றேண்டா...''

''ரொம்ப சந்தோஷம்... வா...''

நான் வீட்டுக்குள் போனேன். பேண்ட் சர்ட்டுக்கு மாறி வீட்டை பூட்டிக் கொண்டு பைக்குக்கு வந்து கஜபதிக்குப் பின்னால் தொற்றிக் கொண்டேன்.

பைக் புறப்பட்டது.

கஜபதிக்கு புறநகரில் வீடு. தனியாக தங்கியிருக்கிறான். விளம்பர ஏஜென்ஸி எடுத்து பை நிறைய பணம் பார்த்துக் கொண்டு இருப்பவன். கொஞ்சம் ஜாலியான பேர்வழி. மது, மாது இரண்டிலுமே கொஞ்சம் அதிகப்படியான நாட்டம். ஆபீஸ் கூட்டுகிற பெண்ணாய் இருந்தாலும் சரி... ஏர்ஹோஸ்டஸ்ஸாக இருந்தாலும் சரி, அழகாய் இருந்து விட்டால் போதும். வலைவீசிப் பார்ப்பவன்.

பைக் ஹைவேஸ் சாலையில் பறந்து கொண்டிருக்க, அதை விரட்டிக் கொண்டிருந்த கஜபதி கூப்பிட்டான்.

''தினேஷ்...''

''ம்...''

''ஊரிலிருந்து என்னோட அப்பா லெட்டர் போட்டிருந்தார். எனக்கு பெண் பார்த்து... முடிவு பண்ணியிருக்காங்களாம்... பொண்ணோட ஃபோட்டோவையும் அனுப்பியிருந்தார்...''

''பொண்ணு எப்படி...?''

''பார்க்கிற மாதிரி இருக்கு...''

''அப்புறமென்ன...? கல்யாணத்துக்கு சரின்னு சொல்ல வேண்டியது தானே...?''

''கல்யாணம் பண்ணிக்கிட்டா இப்படியெல்லாம் ஜாலியா இருக்க முடியாதே...!''

''இதெல்லாம் ஒரு வாழ்க்கையா என்ன...? நீர்க்குமிழி மாதிரி அற்ப சந்தோஷங்கள்... ஒரு ஆண் கல்யாணம் பண்ணிக்கிட்டாதான் அவனோட வாழ்க்கை முழுமையடையும்...''

''நீயும்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டே! உன்னோட வாழ்க்கை என்னாச்சு தினேஷ்...? நீ உன்னோட மனைவி மேலே எவ்வளவோ பிரியமாய் இருந்தே...! உள்ளங்கையில் வெச்சுத் தாங்கினே...! கடைசியில் உன் மனைவி தற்கொலை பண்ணிக்கிட்டு செத்துப் போயிட்டா... ஒரு ஆறு மாசம் நீ ஜோடியா வாழ்ந்தது எவ்வளவு பெரிய கொடுமை...?''

''எல்லார்க்குமா அப்படி நடக்கும்...? ஏதோ என்னோட தலையெழுத்து அப்படி இருந்தது. நடந்தது...! நீ யோசனை பண்ணாமே கல்யாணத்துக்கு ஒத்துக்கோ... வேண்டாம்னு சொல்லிடாதே...''

''பொண்ணை நேர்ல போய்ப் பார்த்த பின்னாடிதான் என்னோட முடிவை சொல்லப் போறேன்...''

''பொண்ணோட பேர் என்ன...?''

''காயத்ரி...''

''பவித்ரமான பேர்...''



பைக் நெடுஞ்சாலையில் ஒரு பதினைந்து நிமிஷ நேரம் பயணித்து, உத்ரா காலனிக்குள் நுழைந்தது. வீடுகள் இன்னமும் அதிகமாய் முளைக்காத காலனி அது. சொற்பமான தெருவிளக்குகள் அழுக்கான ட்யூப்லைட் வெளிச்சத்தை திட்டுத் திட்டாய் பரப்பி வைத்து இருந்தன.

''டேய்... கஜபதி...''

''ம்...''

''உன்னோட கல்யாணம் நடக்கிறதுக்குள்ளே மொதல்ல ஏரியாவை மாத்து...''

''ஏண்டா...?''

''ஏதோ சட்டவிரோத காரியங்கள் நடக்கிற ஏரியா மாதிரியிருக்கு...''

கஜபதி சிரித்தான். ''ராத்திரியில் பார்த்தா அப்படித்தான் இருக்கும்...''

''எனக்கு இந்த ஏரியா பிடிக்கலை...! மொதல்ல நீ சிட்டி பக்கம் வா...''

பைக் காலனியின் ஒழுங்கற்ற ரோடுகளில் பயணித்து இருட்டில் உட்கார்ந்திருந்த ஒரு வீட்டுக்கு முன்பாக போய் நின்றது.

கஜபதி காம்பௌண்ட் கேட்டையும், வீட்டையும் திறந்து கொண்டு உள்ளே போக, நான் பின்தொடர்ந்தேன்.

வீடு அவ்வளவு சுத்தமாக இல்லை. பொருள்கள் இறைந்து கிடக்க, அறையின் குறுக்கே ஓடிய நைலான் கயிற்றில் லுங்கி, பனியன் தொங்கியது.

கஜபதி உடையைக் கூட மாற்றிக் கொள்ளாமல் தரையில் சம்மணம் போட்டு உட்கார்ந்தான். பாட்டிலின் மூடியைத் திறந்து இரண்டு கண்ணாடி டம்ளர்களில் ரெட் ஜேஸ்மின் விஸ்கியை ஊற்றி, ஃப்ரிஜ்ஜிலிருந்து எடுத்து வந்த சோடாவைக் கலந்தான். ஐஸ் துண்டங்களை மிதக்க விட்டான். ஒரு டம்ளரை என்னிடம் கொடுத்துவிட்டு 'சியர்ஸ்' சொல்லி கண்ணாடி டம்ளர்களை 'டேஷ்' அடித்துவிட்டு அந்த நெருப்பை 'கபகப'வென்று விழுங்கினான். நான் மெல்ல சப்பி

இரண்டு துளிகளை மட்டும் தொண்டைக்கு அனுப்பினேன். கஜபதி மேலும் ஒரு டம்ளர் விஸ்கியை வயிற்றுக்கு கொடுத்து விட்டு சுவர்க்கு சாய்ந்து உட்கார்ந்து என்னைப் பார்த்து கண்ணைச்சிமிட்டினான்.

''எப்படியிருக்கு... தினேஷ்...?''

நான் பாதி டம்ளரை காலி செய்திருந்தேன். ''உண்மையிலேயே சூப்பர்... உடம்பெல்லாம் 'கதகத'ன்னு ஆயிடுச்சு... ஃபாரின் சரக்கு ஃபாரின் சரக்குதான்...''

''பாதி டம்ளர்க்கே இப்படிச் சொல்றே... இன்னும் ஒரு டம்ளர் உள்ளே போகட்டும்... 'ஜிவ்'ன்னு ஆகாயத்துல பறப்பே...''

நான் முதல் ரவுண்டை முடிப்பதற்குள் கஜபதி மூன்றாம் ரவுண்டை முடித்துவிட்டு குழற ஆரம்பித்தான்.

''என்ஜாய்... தினேஷ்! என்ஜாய்...! உன் மனசுக்குள்ளே எந்தக் கவலையும்... இருக்கக் கூடாது...''

''......'' நான் டம்ளரை காலி செய்தேன். ''செத்துப்போன பொண்டாட்டியோட ஞாபகமே உனக்கு வரக் கூடாது... அவளை மறந்துடு...'' கஜபதி சொல்ல எனக்குள் ஏறியிருந்த போதையில் நானும் குழற ஆரம்பித்தேன்.

''கஜபதி...! என்னோட ரேகாவை நான் மறக்கணும்னா என்னோட உடம்புல உயிர் இருக்கக் கூடாது... அப்பத்தான் இது சாத்தியம்...''

''அடப்போடா...! உலகத்துல இல்லாத பெரிய பொண்டாட்டி! ஒரேயடியா உருகறான்...''

''உனக்கென்னடா தெரியும்... என்னோட ரேகாவைப் பத்தி?''

கஜபதிக்கு போதை தலைக்கு ஏறியிருக்க, கோணலாய் சிரித்தான். ''உன்னையவிட எனக்கு ரேகாவை நல்லாவே தெரியும்...''



கஜபதி பேசிய அந்த வார்த்தைகளில் என்னுடைய போதை சட்டென்று காணாமல் போயிற்று. அவனை உற்றுப் பார்த்தேன். நான்காவது டம்ளர் விஸ்கி தொண்டைக்குள் போய்க் கொண்டிருந்தது. அவனுடைய தோள்களை இறுகப் பற்றினேன். குரலை உயர்த்தினேன்.

''கஜபதி... நீ என்ன சொல்றே...? என்னோட ரேகாவைப் பற்றி உனக்குத் தெரியுமா...?''

''ம்... தெரியும்...''

''என்ன தெரியும்...?''

''வேண்டாம், விடு... அதையெல்லாம் சொன்னா உன்னோட மனசுக்கு கஷ்டமாய் இருக்கும்...''

என் கோபம் வெப்பமாய் பீறிட்டு என் ரத்த ஓட்டத்தில் கலந்தது. அவனைப் பிடித்து உலுக்கினேன்.

''டேய்...! நீ இப்போ சொல்லப் போறியா... இல்லையா...?''

கஜபதியின் கண்களில் இப்போது போதையின் சிவப்பு பரவியிருக்க, என்னை கோணல் சிரிப்போடு பார்த்தான்.

''டேய் தினேஷ்...! நீ இவ்வளவு தூரம் வற்புறுத்தி கேக்கிறதாலே சொல்றேன்... உன்னோட ஒய்ஃப் ரேகா ஏன் தற்கொலை பண்ணிக்கிட்டா தெரியுமா...?''

''ஏன்...?''

''சொன்னா... நீ நம்ப மாட்டே...!''

''சொல்லுடா...'' நான் வெறித்தனமாய்க் கத்த கஜபதி பலமாய் சிரித்தான்.

''பார்த்தியா...? நான் விஷயத்தைச் சொல்றதுக்கு முந்தியே உனக்கு இவ்வளவு கோபம் வருதே...? சொன்னா என்ன ஆவே...?''

நான் அவனை ஆவேசமாய் உலுக்கினேன்.

''இப்ப... நீ சொல்லப் போறியா, இல்லையா...?''

''சொல்றேன்... சொல்றேன்...! உன்னோட மனைவி தற்கொலை பண்ணிக்கிட்டு செத்துப் போனதுக்கு காரணம்... அவ சுத்தமானவ இல்லைங்கிறதுதான்...''




ஓஸோன் போர்வையில் ஓட்டை விழுந்து இருப்பதும், விஞ்ஞானிகள் அதைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டு இருப்பதும் நாம் அறிந்ததே...! ஆனால் அந்த ஓஸோனின் ஓட்டை எவ்வளவு பெரியது என்று தெரியுமா? இதோ பதில்: இந்தியாவைப் போல் ஏழு மடங்கு பெரிதான ஓட்டை அது.

விவேக் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு ரூபலாவிடம் பேசினான்.

''தாயின் மணிக்கொடி பாரீர்' பாடினானா...?''

''ஆமாங்க...''

''எவ்வளவு நிமிஷம்...?''

''அவன் ரெண்டு வரி பாடினதுமே நான் ரிஸீவரை வெச்சுட்டேன்...''

''சரி...! நான் வர்ற வரைக்கும் ஃபோன் வந்தா அட்டெண்ட் பண்ணாதே...''

''ரிஸீவரை எடுத்துக் கீழே வெச்சுடட்டுமா...?''

''வெச்சுடு...''

''நீங்க வர்றதுக்கு நேரமாகுமா...?''

''எப்படியும் ரெண்டு மணி நேரமாயிடும்... வர்ற வழியில் ஒரு கேஸ்...! அட்டெண்ட் பண்ண வேண்டியதாயிடுச்சு...''

''என்ன கேஸ்...?''

''வந்து சொல்றேன்...'' விவேக் செல்ஃபோனை அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு மறுபடியும் கருகிப் போன காலுக்கு பார்வையைக் கொண்டு போனான்.

''டொமினிக்...''

''ஸார்...''

''இது யாரோட இடம்...?''

''கவர்ன்மெண்ட் புறம்போக்கு நிலம் ஸார்...''

''இந்தப் பக்கம் ஆட்கள் வர்றது உண்டா...?''



''கள்ளச்சாராயம் காய்ச்சறவங்களோட நடமாட்டம் ஆறு மாசத்துக்கு முன்னாடி வரை இருந்தது ஸார். புது எஸ்.பி. ஒருத்தர் வந்ததும் அதையெல்லாம் ஒழிச்சுக் கட்டிட்டார்... அதுக்கப்புறமா ஆள் நடமாட்டமே இல்லை ஸார்...''

''பக்கத்துல ஏதாவது கிராமம் இருக்கா...?''

''மல்லிப்பாக்கம்ன்னு ஒரு குடியிருப்பு பகுதி இருக்கு ஸார்... பெரும்பாலும் மீனவர்கள்தான்...''

விவேக் பக்கத்தில் நின்றிருந்த இன்ஸ்பெக்டர் சிற்றரசுவிடம் திரும்பினான்.

''மல்லிப்பாக்கம் உங்க பீட் ஏரியாதானே...?''

''ஆமா... ஸார்...''

''கடந்த வாரத்துல யாராவது பொண்ணைக் காணோம்ன்னு கம்ப்ளைய்ண்ட் பண்ணியிருக்காங்களா...?''

''இல்ல ஸார்... மிஸ்ஸிங் பர்ஸன்ஸ் கேஸ் எதுவுமே ஸ்டேஷன் ஃபைலில் இல்லை... பொதுவா இது ஒரு ஜீரோ க்ரைம் ஏரியா ஸார்... ரோடு ஆக்ஸிடெண்ட்ஸ் தவிர வேற எதுவும் நடக்காது. 'தெப்ட்' கூட ரேர்ராகத்தான் நடக்கும்...''

இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே- விஷ்ணு சீன் ஆஃப் க்ரைம் பார்த்துவிட்டு விவேக்கிடம் வந்தான்.

''பாஸ்...! சீன் ஆஃப் க்ரைமில் எதுவும் கிடைக்கலை. பெரிய சைபர். தந்தூரி சிக்கன் கணக்காய் வெந்து போயிருக்கிற இந்தக் காலை நாய் வேறஒரு ஏரியாவிலிருந்து கவ்விக்கிட்டு வந்து இருக்கணும்... போலீஸ் டாக்ஸை வரவழைச்சா ஏதாவது க்ளூ கிடைக்கலாம் பாஸ்...''

''விஷ்ணு...'' என்றான் விவேக்.

''பாஸ்...''

''நம்ம கார்க்குப் போய் என்னோட இன்வெஸ்டிகேஷன் டிவைஸ் பாக்ஸை கொண்டுட்டு வா...''

''இதோ...'' விஷ்ணு கிளம்பிப் போய் ஐந்தே நிமிஷத்தில் இன்வெஸ்டிகேஷன் டிவைஸ் பாக்ஸோடு

திரும்பி வந்தான்.

விவேக் அந்த பாக்ஸை வாங்கித் திறந்து உள்ளே ரெக்ஸின் உறையில் தூங்கிக் கொண்டிருந்த அந்த லாஸிக் லென்ஸை எடுத்தான். வலது கண்ணில் அதைப் பொருத்திக் கொண்டு, கருகிய காலை உற்றுப் பார்த்து ஃபோர்ஸிப்ஸால் காலின் சதைப்பகுதியை மெல்லக் கிளறினான். பின் ஒரு செல் டேப்பை எடுத்து இரண்டு அங்குல அளவு வெட்டிக் கொண்டு, அந்த டேப்பை சதை பாகத்தில் வைத்து அழுத்தி எடுத்தான்.

''சிற்றரசு...'' திரும்பிப் பார்த்து குரல் கொடுத்தான்.

''ஸார்...''

''ஒரு நிமிஷம் என் பக்கத்துல வாங்க...''

அவர் வந்தார். விவேக் அந்த செல்டேப் துண்டை அவரிடம் காட்டியபடி கேட்டான்.

''இதுல ஏதாவது ஒட்டியிருக்கா...?''

அவர் குனிந்து உற்றுப் பார்த்துவிட்டு தலையாட்டினார்.

''இல்ல ஸார்...''

''இப்ப இந்த லாஸிக் லென்ஸை மாட்டிக்கிட்டு செல்டேப்பைப் பாருங்க...'' விவேக் கழற்றிக் கொடுத்த லாஸிக் லென்ஸை வாங்கி தன் வலது கண்ணில் பொருத்திக் கொண்ட சிற்றரசு, அந்த செல்டேப்பை உற்றுப் பார்த்து விட்டு விவேக்கிடம் திரும்பினார்.

''ஏதோ... மெல்லிசாய் ரோம இழைகள் மாதிரி ஊதா நிறத்துல தெரியுது ஸார்...''

''யூ... ஆர் கரெக்ட்...! அது என்னன்னு உங்களால ஐடென்டிபை பண்ண முடியுதா?''

''ஸாரி ஸார்...! ஐ குட் நாட்...''

விவேக் ஒரு சின்னப் புன்னகையோடு சிற்றரசுவை ஏறிட்டான்.

''இங்கே பக்கத்துல ஏதாவது கரும்புத் தோட்டம் இருக்கா?''

யோசித்த சிற்றரசு தலையாட்டினார்.

''இருக்கு ஸார்... இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்துல செம்பாக்கம்னு ஒரு ஊர். அந்த ஊர்ல கரும்புதான் பிரதான விவசாயம்...''



''கரும்பு பூ பூக்கிற காலம்தானே இது?''

''ஸாரி... ஸார்... நோ ஐடியா...''

விவேக் தன் செல்ஃபோனை எடுத்து உசுப்பி ஒரு டெலிஃபோன் எண்ணைக் கண்டுபிடித்து டயல் செய்தான். பேசினான்.

''சுகர்கேன் ப்ரீடிங் இன்ஸ்டிட்யூட்?''

''எஸ்...''

''மிஸ்டர் ஸ்வாமிநாதன் ப்ளீஸ்...''

''எஸ்... ஹோல்டிங்...''

''ஸ்வாமிநாதன்...! நான் விவேக்...!''

''ஓ...! விவேக்... நீங்களா...? என்ன ஒரு எதிர்பாராத டெலிஃபோன் அழைப்பு. எனிதிங்க்... இம்பார்ட்டண்ட்...?''

''எஸ்...! கரும்பு சம்பந்தமா ஒரு இன்பர்மேஷன் வேணும்...''

''ப்ளீஸ்...''

''கரும்பு பூ பூக்கிற காலமா இது...?''

''ஆமா...! எதுக்காக இந்தக் கேள்வி...?''

''ஒரு கேஸுக்கு இதுதான் முக்கியமான க்ளூ. என்னோட கணிப்பு சரியா இருந்தா மறுபடியும் உங்களுக்கு ஃபோன் பண்ண வேண்டியிருக்கும். தேங்க்யூ ஃபார் யுவர் கைண்ட் இன்பர்மேஷன்...''

விவேக் செல்ஃபோனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு இன்ஸ்பெக்டர் சிற்றரசுவிடம் திரும்பினான்.

''இது கரும்பு பூ பூக்கிற சீஸன் தான். கருகிப்போன காலில் ஒட்டியிருந்த இந்த ரோம இழைகள் கரும்புப் பூவோட மகரந்தங்கள். இது மாதிரியான ஊதா நிற மகரந்தங்கள் கரும்புப் பூவுக்கு மட்டுமே உண்டு. என்னோட சிறுவயது நாட்கள் பெரும்பாலும் கிராமத்திலேயே கழிந்ததினால இதுமாதிரியான விஷயங்கள் எல்லாமே ரொம்பவும் பரிச்சயம். இந்த காலுக்குரிய பெண் ஒரு கரும்புத் தோட்டத்துக்குள்ளே வெச்சு கொலை செய்யப்பட்டு இருக்கணும். பாடியை அங்கேயே வெச்சு எரிச்சு இருக்கணும். பாடி

எரிக்கப்பட்ட பிறகு அந்த உடம்பு பாகங்களில் கரும்புப் பூவின் மகரந்தங்கள் காற்றில் பறந்து சென்று ஒட்டியிருக்கலாம். இது ஒரு அனுமானம் தான். இது உண்மையாகவும் இருக்கலாம். இல்லாமலும் போகலாம். பக்கத்தில் இருக்கிற கரும்புத் தோட்டங்களை போய்ப் பார்த்து இன்வெஸ்டிகேட் பண்ணினால் நிச்சயம் உண்மைகள் வெளியே வரும்...''

''இப்பவே கிளம்பலாம் ஸார்... அந்த செம்பாக்கம் கிராமம் இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்துலதான் இருக்கு ஸார்...''

சிற்றரசு சொல்லிக் கொண்டிருக்கும் போதே விவேக்கின் செல்ஃபோன் ரிங்டோனை வெளியிட்டது. எடுத்து டிஸ்ப்ளேயில் அழைப்பது யார் என்று பார்த்தான்.

ரூபலா இல்லை.

வேறு ஏதோ நம்பர். விவேக் குரல் கொடுத்தான்.

''எஸ்...''

பதிலுக்கு மறுமுனை பாடியது.

''வந்தே மாதரம்...!''



துப்பாக்கியிலிருந்து சீறிப்பாயும் தோட்டா எவ்வளவு தூரம் நேர்க்கோட்டில் பயணிக்கிறது என்பதை வைத்துத்தான் அந்த துப்பாக்கியின் மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது. துப்பாக்கியிலிருந்து தோட்டா வெளிப்படும் வேகத்தை மஸில் வெலாசிட்டி (Muzzle Velocity) என்று சொல்வார்கள். தோட்டாவின் வேகம் அதன் பார்கஷன் என்னும் உறையில் உள்ள வெடிமருந்தைப் பொறுத்தது.

நான் வெடித்தேன்.

''என்னடா சொல்றே...? என்னோட ரேகா சுத்தமானவள் இல்லையா...?''



''ஆமா...'' என்றான் கஜபதி. ''அவ தற்கொலை பண்ணிக்கிட்டு செத்துப் போனதுக்கு காரணம் தான் பண்ணின தப்பு எங்கே வெளியே தெரிஞ்சுடுமோங்கிற பயம்தான்...''

''ரேகா தப்பு பண்ணினாளா?''

''ம்... அதை தப்புன்னு சொல்றதைவிட துரோகம்னு சொல்லலாம். உன் வீட்டுக்கு எதிர்ல ஒருத்தன் குடியிருந்தானே... ஒரு மலையாள வாலிபன்... அவன் பேர் என்ன?''

''சத்யன்...''

''அந்த சத்யனுக்கும், உன்னோட மனைவி ரேகாவுக்கும் தொடர்பு இருந்தது... உனக்குத் தெரியாது... பட்டணமுக்குத் தெரியும்...''

நான் வீறிட்டேன்.

''வேண்டாம் கஜபதி...! குடிச்சுட்டு கண்டபடி உளறாதே! என்னோட ரேகா எல்லார்கிட்டேயும் சகஜமா சிரிச்சு பேசுவா... அதை நீ கொச்சைப்படுத்தறே...!''

கஜபதி சிரித்தான். ''சிரிச்சுப் பேசினா தப்பில்லை தினேஷ்... ஒரே கட்டிலில் ரெண்டு பேரும் கட்டிப் பிடிச்சு பேசிட்டிருந்தது கூட தப்பில்லைன்னு சொல்றியா...''

''கஜபதி! வேண்டாம்... இதுக்கு மேலே ஒரு வார்த்தைகூட பேசாதே...!''

''இதோ பார்ரா தினேஷ்...! குடிச்சுட்டு பேசறதா நினைக்காதே. உன் பொண்டாட்டியோட கேரக்டர் ஆரம்பத்திலிருந்தே சரியில்லை. என்னைக் கூட சில சமயங்கள்ல அவ தொட்டுத் தொட்டுப் பேசுவா. நான் மட்டும் நினைச்சிருந்தா என்னிக்கோ அவளை...''

''டேய்...!''

ஒரு மிருகம் மாதிரி வீறிட்ட நான், பக்கத்தில் இருந்த விஸ்கி பாட்டிலை எடுத்து கஜபதியின் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டேன்.

பாட்டில் சில்லு சில்லாய் உடைந்து விஸ்கி துளிகளோடு கஜபதியின் ரத்தத் துளிகளும் கலந்து பக்கத்து சுவர் பூராவும் தெறித்தது.

ஒரு சின்ன அலறலைக் கூட வெளிப்படுத்தாமல் அப்படியே சரிந்து விழுந்து இறந்து போனான்.



5

சயனைடை விட கொடிய விஷம் உண்டா...? உண்டு. அந்த விஷத்தின் பெயர் டெட்ரா-க்ளோரோ-டை பென்ஸோ-பி-டயாக்ஸின். (TETRA CHLORO-DIBENZO-P-DIOXIN). இது சயனைட் விஷத்தை விட 1,50,000 மடங்கு விஷத்தன்மை கொண்டது. விஷம் நாக்கில் பட்டால் உடனே மரணம்.

போலீஸ் கமிஷனர் மல்லய்யா பெருமூச்சொன்றை வெளியேற்றி விட்டு எதிரில் உட்கார்ந்திருந்த விவேக்கை ஏறிட்டார்.

"ஸோ... எந்த க்ளூவும் கிடைக்கலை?"

"எஸ்... ஸார்...! செம்பாக்கம் கிராமத்தில் நிறைய கரும்புத் தோட்டங்கள். கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கர் நிலத்தில் கரும்பை சாகுபடி பண்ணியிருக்காங்க. இருநூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள். அப்படியும் என்கொய்ரி பண்ணிப் பார்த்தோம். பட் யூஸ்ஃபுல் க்ளூ எதுவும் கிடைக்கலை... ஸார்..."

"மிஸ்டர் விவேக்... எனக்கு ஒரு சந்தேகம்..."

"ப்ளீஸ் ஸார்..."

"அந்த கருகிப் போன காலில் ஒட்டியிருந்தது கரும்புப் பூக்களின் மகரந்த இழைகள் தானா...?"

"ஆமா... ஸார்...! அந்த மகரந்த இழைகளை சுகர்கேன் ப்ரீடிங் இன்ஸ்டிட்யூட்டுக்கு கொண்டுபோய் ஆபீஸர் ஸ்வாமிநாதன் கிட்டே காட்டி கன்ஃபர்ம் பண்ணிக்கிட்டேன்..."

"அந்த கரும்புக் காட்டுக்குள்ளே... மர்டர் நடக்காமே வேற எங்கேயாவது நடந்து இருக்க வாய்ப்பு இருக்கா...?"



"சான்ஸஸ் ஆர் ரேர்... ஸார்...! அந்த ஆயிரம் ஏக்கர் கரும்புக் காட்டுக்குள்ளே ஏதாவது ஒரு பகுதியில் சம்பவம் நடந்து இருக்க வாய்ப்பு அதிகம். சம்பவம் நடந்து ரெண்டு மூணு நாள் ஆகியிருக்கலாம். போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் கைக்கு வந்த பின்னாடிதான் சரியான தகவல்கள் கிடைக்கும் ஸார்..."

"காலில் இருந்த கொலுசில் ஏதாவது நகைக் கடை சீல் இருந்ததா...?"

"அந்த வெள்ளிக் கொலுசு கிட்டத்தட்ட நெருப்பில் உருகிடுச்சு ஸார்..."

"மேற்கொண்டு உங்க அடுத்த 'மூவ்' என்ன விவேக்...?"

"மறுபடியும் செம்பாக்கம் போய் போலீஸ் டாக்ஸ் உதவியோடு அந்தப் பெண் எரிக்கப்பட்ட இடத்தை 'ஸ்பாட் அவுட்' பண்ண முடியுமான்னு பார்க்கணும் ஸார்..."

"விவேக்...! இது கொஞ்சம் காம்ப்ளிகேட்டட் கேஸ். இருந்தாலும் நீங்க இதில் வெற்றியடைவீங்க என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. செம்பாக்கம் எப்ப போறீங்க...?"

"நாளைக்கு மத்தியானம் ஸார்..."

"போலீஸ் டாக் ஸ்க்வாடுக்கு சொல்லிட்டீங்களா...?"

"தகவல் கொடுத்துட்டேன் ஸார்..."

"ஓ.கே. மிஸ்டர் விவேக்... நான் இப்போ டி.ஜி.பி.யைப் பார்க்க கிளம்பிட்டிருக்கேன். நாம மறுபடியும் நாளைக்கு சாயந்தரம் மீட் பண்ணலாம்..."

விவேக், கமிஷனர் கையைப் பற்றி குலுக்கிவிட்டு வெளியே வந்தான். மரத்தடியில் நின்ற காரை நோக்கி நடந்தபோது பின்னால் பைக் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

விஷ்ணு!

"பாஸ்...! கமிஷனர் கிட்ட கருகிப்போன காலைப் பத்தி பேசிட்டீங்களா...?"

''ம்...''

''இது ஒரு காம்ப்ளிகேட்டட் கேஸ்ன்னு சொல்லியிருப்பாரே...?''

''ம்...ம்...''

''இருந்தாலும் இதுல நீங்க வெற்றியடைவீங்க என்கிற நம்பிக்கை எனக்கு இருக்குன்னு சொல்லியிருப்பாரே...''

விவேக், விஷ்ணுவை ஆச்சர்யமாய்ப் பார்த்தான்.

''எப்படிடா இவ்வளவு கரெக்டா சொல்றே?''

''உண்மையைச் சொன்னா நம்ப மாட்டீங்க பாஸ்...! ஒரு மோகினிப் பிசாசு எனக்கு ரொம்ப நாளா கேர்ள் ஃப்ரெண்ட். அது மூலமா எனக்கு எல்லா விஷயமும் வந்துடும்... கை வசம் குட்டிச் சாத்தானும் இருக்கு...''

''டேய்... போதும்...!''

''நிறுத்திக்கிட்டேன் பாஸ்...''

''போன காரியம் என்னாச்சு?''

''கருகிப் போன காலோட போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் ரெடி பாஸ்...''

''எடு...''

விஷ்ணு எடுத்துக் கொடுத்தான்.

''பி.எம். பண்ணினது யாரு...?''

''டாக்டர் செல்வம்...''

''என்ன சொன்னார்...?''

''இந்த காலோட கதாநாயகருக்கு வயசு [illegible]லிருந்து 30க்குள் இருக்கலாமாம்...''

''ம்...''

''இறந்து 72 மணி நேரம் ஆகியிருக்கலாம்...''

''ம்...''

''பெட்ரோலை ஊத்தி எரிச்சிருக்காங்க...''

''ம்...''

''இயற்கை மரணம் கிடையாது. கொலையாய் இருக்க வாய்ப்பு அதிகம்...''

''எதை வெச்சு இப்படிச் சொன்னார்? கேட்டியா?''

''கேட்காமே இருப்பேனா பாஸ்... கேட்டேன்...''



''என்ன சொன்னார்...?''

''காலோட சதை பாகத்தில் காணப்பட்ட ரிஜிட்னஸ் 70 சதவீதம் இருந்ததாம்...''

''ஸோ... இது கொலை?''

''டாக்டர் சத்தியமே பண்ணிட்டார்...''

விவேக் மேற்கொண்டு பேச வாயைத் திறந்த விநாடி செல்ஃபோன் அழைத்தது. எடுத்து காதுக்கு பொருத்தினான்.

மறுமுனையில் ஒரு ஆண்குரல் பாடியது.

''ஆடுவோமே... பள்ளுப் பாடுவோமே... ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று...''

EAR DRUM என்று சொல்லப்படும் நம் காதில் உள்ள செவிப்பறையை மூடியிருக்கும் மெல்லிய [illegible] MEMBRANE) என்று பெயர். இதில் ஒரு சின்ன ஓட்டை விழுந்தாலும் உடனே சீழ்பிடித்து விடும். ஸோ, காதைக் குடைபவர்கள் பாதுகாப்பாக 'EAR BUDS' களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.




கஜபதியின் பின் மண்டையிலிருந்து வழிந்த ரத்தம் இப்போது செங்கல் நிறத்துக்கு மாறி உறைந்து கொண்டிருந்தது. தனியாய் சுற்றிக் கொண்டிருந்த ஈ இப்போது ஒரு சின்ன ஈக்கூட்டத்தையே கூட்டிக் கொண்டு வந்து மொய்த்தது. முகத்தில் அரும்பி நின்று 'வழியலாமா... வேண்டாமா...?' என்று தயங்கிய வியர்வையை கர்ச்சீப்பால் அழுந்தத் துடைத்தேன். கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தேன்.

பகல் நேரத்திலேயே ஆள் நடமாட்டம் இல்லாத ஏரியா துடைத்து வைத்த மாதிரி தெரிந்தது.

மறுபடியும் கஜபதிக்குப் பக்கத்தில் வந்தேன். அவனுடைய திறந்த வாயும், நிலைத்த கண்களும்

வயிற்றுக்குள் பயத்தைப் பாய்ச்சியது.

இனிமேல்தான் நான் சாமர்த்தியமாக செயல்பட வேண்டும். எக்காரணம் முன்னிட்டும் நான் போலீஸ் வளையத்துக்குள் வந்துவிடக் கூடாது.

நான் யோசித்தேன். நிதானமாக யோசித்தேன்.

'கஜபதி என் வீட்டிற்கு வந்து என்னை கூப்பிட்டதையோ, அவன் பைக்கில் நான் ஒன்றாகச் சென்றதையோ யாரும் பார்க்கவில்லை. பின் எதற்காக நான் பயப்பட வேண்டும்...?'

'வந்த சுவடு தெரியாமல் வெளியே போய்விட வேண்டியதுதான்!'

அறையில் எரிந்து கொண்டிருந்த டியூப் லைட்டை அணைத்துவிட்டு கதவைச் சாத்திக் கொண்டு வெளியே வந்தேன். குளிரின் பனிப் போர்வையும், இருட்டின் கறுப்புப் போர்வையும் அந்த ஏரியாவில் போர்த்தியிருக்க, நான் தெருவில் இறங்கி வேகமாய் நடந்தேன். உடம்பில் இருந்த எல்லா வியர்வை சுரப்பிகளும் விழித்துக் கொண்டு மும்முரமாய் இயங்க, உடம்பு தெப்பமாய் நனைந்தது.

விடுவிடுவென்று நடந்து கிட்டத்தட்ட ஒரு கிலோமீட்டர் தூரம் வந்து இருப்பேன்.

சட்டென்று அந்த எண்ணம் உறைத்தது.

'நான் சாப்பிட்ட விஸ்கி டம்ளரில் என் கைரேகைகள் பதிந்து இருக்குமே...! கஜபதியின் முக்கிய நண்பர்களில் நானும் ஒருவன். புலன் விசாரணையின் போது போலீஸ், டம்ளரில் பதிந்து இருக்கும் கைரேகையை என் கைரேகையோடு ஒப்பிட்டால் மாட்டிக் கொள்ள வேண்டியது தான்.

'முட்டாளே! போ...! முதலில் போய் அந்த டம்ளரை எடுத்து கண்காணாத இடத்தில் வீசி எறி! அதோடு நிற்காமல் உன் கைரேகை பதிய எங்கெங்கே வாய்ப்பு இருக்கோ அங்கெல்லாம் துடை. சுத்தமாய் துடை. ஏதாவது ஒரு தடயத்தை விட்டுவிட்டு வந்தால் போலீஸ் உன்னை சுலபமாய் அமுக்கி விடுவார்கள்!'



இருதயம் தடதடவென்று அடித்துக் கொள்ள, திரும்பவும் கஜபதியின் வீட்டை நோக்கி நடந்தேன்.

மூச்சு வாங்கிக் கொண்டு பதினைந்து நிமிஷ நடை. கஜபதியின் வீடு வந்தது. சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டேன்.

ஆட்கள் யாருமில்லை. வலது கைக்கு என் கர்ச்சிப்பை எடுத்து சுற்றிக் கொண்டு- வாசற்படி ஏறி கதவின் மேல் கையை வைத்தேன்.

கதவு திறந்து கொண்டது.

உள்ளே கரித்தூளைக் கொட்டிய தினுசில் இருட்டு பரவியிருக்க, நான் நுழைந்து சுவிட்ச் இருக்கும் திசை நோக்கி மெல்ல நடந்து போய் சுவிட்சைக் கண்டுபிடித்து தேய்த்தேன்.

ட்யூப்லைட் உயிர் பிடித்துக் கொண்டு பளீரென்று எரிந்தது. உறைந்து போன ரத்தத்தில் கஜபதி தெரிந்தான். ரத்தம் கட்டி கட்டியாய் தெரிய அதன் மேல் ஈக்கள் படை.

முதலில் நான் சாப்பிட்ட விஸ்கி டம்ளரை எடுத்துக் கொண்டு அதை துடைத்த விநாடி- மின்சாரம் மூச்சை விட- அறையில் எரிந்து கொண்டிருந்த ட்யூப் லைட் அணைந்தது.

என்னைச் சுற்றிலும் இருட்டு. அப்படியே நின்றிருந்தேன்.

'மறுபடியும் மின்சாரம் வராமல் இந்த அறையில் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது...!'

காத்திருந்தேன்.

ஒரு நிமிஷம்...

இரண்டு நிமிஷம்... மூன்று... நான்கு... ஐந்து!

மின்சாரம் வருகிற மாதிரி தெரியவில்லை. வியர்த்து வழிந்து கொண்டு அப்படியே நின்றிருந்தேன்.

பத்து நிமிஷம் கரைந்து போயிருந்தபோது மனசுக்குள் ஒரு பயம் முளைத்தது.

'மின்சாரம் வராமலே போய் விடுமோ?'

'தீப்பெட்டி இருந்தாலாவது பரவாயில்லை!'

'தேடிப் பார்க்கலாமா?'

இடது பக்கம் ஒரு அலமாரி இருந்தது நினைவுக்கு வந்தது. மெல்ல அடி எடுத்து வைத்தேன். கஜபதியின் உடல் கிடந்த இடத்தை ஞாபகம் வைத்துக் கொண்டு ஜாக்ரதையாய் நடை போட்டேன்.

பத்தடி நடந்திருப்பேன்.

வீட்டு வாசலில் ஆட்டோ சத்தம் கேட்டது.




சோனி நிறுவனம் 'ப்ளே ஸ்டேஷன்-3' என்ற சூப்பர் கம்ப்யூட்டரை சமீபத்தில் அறிமுகப்படுத்தியது. ஒரு மூளையின் திறனில் நூற்றில் ஒரு பங்கு திறன் கொண்டது அது. சூப்பர் கம்ப்யூட்டர் ஆராய்ச்சி இதே வேகத்தில் போனால் 2080-ம் ஆண்டுக்குள் சோனி 'ப்ளே ஸ்டேஷன்-5' கம்ப்யூட்டர்கள் உருவாகி விடும். அது மனித மூளையைப் போலவே செயல்படும். அதாவது மனிதனைப் போலவே யோசிக்கும். அழும். சிரிக்கும். பக்கத்தில் ஒரு பெண் இருந்தால் கண்ணடித்து 'ஓடிப் போலாமா...?' என்று கூட கேட்கும்.

காலை ஏழு மணி.

விஷ்ணு பைக்கை நிறுத்திவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான். சமையல்கட்டுக்குப் போய்க் கொண்டிருந்த ரூபலாவைப் பார்த்ததும், ''குட்மார்னிங் மேடம்...'' என்றான்.

''என்ன விஷ்ணு இவ்வளவு காலையில் வந்திருக்கே? நீ எட்டு மணிக்கு குறைஞ்சு 'பெட்'டை விட்டு எந்திரிக்க மாட்டியே...?''

''பாஸோட கட்டளை மேடம்... 'நாளைக்கு காலையில் ஏழு மணிக்கெல்லாம் நீ வீட்ல இருக்கணும்'னு நேத்திக்கு ராத்திரியே சொல்லிட்டார். பாஸ் எங்கே மேடம்...?''

''குளிச்சிட்டிருக்கார்...! ஆமா... நீ வரும்போது எந்த ஹோட்டல்ல டிஃபன் சாப்ட்டுட்டு வந்தே...?''



''நல்ல கதை இது... நான் எதுக்காக ஹோட்டல்ல சாப்பிடணும்...? இன்னிக்கு எனக்கு டிஃபன் பாஸ் கூடத்தான். வீட்ல என்ன டிஃபன் மேடம்...?'' விஷ்ணு கேட்க, ரூபலா அவனை முறைத்து விட்டு சொன்னாள்.

''அடை தோசை, கார சட்னி...''

''சூப்பர்...''

''உனக்குக் கிடையாது...''

''மேடம்... எனக்கு அடை தோசைன்னா உசிரு...! எட்டே எட்டு தோசை மட்டும் எனக்குப் போதும். எனக்கு சிட்டுக் குருவி வயிறு... அதுக்கு மேல நான் சாப்பிட மாட்டேன்... சாப்பிட்டா வயித்துக்கு ஒத்துக்காது மேடம்...''

''நீ பாஸ் கூட உட்கார்ந்து டிஃபன் சாப்பிடணும்னா எனக்கு ஒரு உதவி பண்ணணும்...''

''சொல்லுங்க மேடம்... நான் என்ன பண்ணணும்? அனுமார் வேஷம் போட்டுட்டு இலங்கைக்குப் போயிட்டு வரணுமா...?''

''அது இன்னொரு நாளைக்கு வைச்சுக்கலாம். இப்ப நான் கேக்கப் போறது வேற ஒரு உதவி...''

''கேளுங்க மேடம்...''

''உன்னோட பாஸ் ரெண்டு நாளா சரியில்லை. என்கிட்டே ஸ்கேல்ல அளந்த மாதிரி பேசறார். சாப்பிடும் போதும் ஏதோ யோசனை... படுக்கையில் படுத்துட்டிருக்கும் போதும் ஏதோ யோசனை. கேட்டா ஒண்ணும் இல்லைன்னு சொல்றார்...''

''நீங்க என்ன உதவி கேக்கப் போறீங்கன்னு எனக்குப் புரிஞ்சு போச்சு மேடம்...''

''சொல்லு, பார்க்கலாம்...''

''பாஸ் சின்ன வீடு ஏதாவது செட்டப் பண்ணிட்டாரோன்னு உங்களுக்கு சந்தேகம்...! அதை நான் கண்டுபிடிச்சு சொல்லணும். அவ்வளவுதானே...? நீங்க கவலைப்படாதீங்க மேடம்... இன்னும் ரெண்டே நாள்ல அந்தப் பொண்ணு யாரு...? ஊரு... பேரு... எல்லாத்தையும் கேட்டுக்கிட்டு வந்துடறேன்.

அதுக்கப்புறமா அவளை என்ன பண்றதுன்னு யோசிப்போம்...''

''டேய்ய்...!''

''ஸாரி மேடம்...! நான் ஏதோ தப்பா சொல்லிட்டேன் போலிருக்கு. பாஸுக்கு சின்ன வீடு செட்டப் பண்ற அளவுக்கு தைரியம் எல்லாம் கிடையாது. அவர் ஹண்ட்ரட் பர்ஸண்ட் பக்கா ஏகபத்தினி விரதன். நீங்க விஷயத்தைச் சொல்லுங்க மேடம்...''

ரூபலா குரலைத் தாழ்த்தினாள். ''அவர்க்கு கடந்த நாலைஞ்சு நாளா எவனோ ஒருத்தன் ஃபோன் பண்ணி பாட்டுப் பாடறான்...''

''என்னது, பாட்டா?''

''ஆமா...''

''என்ன பாட்டு...?''

''ஒரு தடவை 'ஜனகனமண' பாடினான். அப்புறம் 'தாயின் மணிக்கொடி' பாடினான்... அதுக்கப்புறம் 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே'ன்னு பாடினான். நேத்து ராத்திரி ஃபோன் பண்ணி 'வந்தே மாதரம் என்போம்'ன்னு பாடினான்...''

'''ஸாரே ஸஹான் ஸே அச்சா' பாடலையா மேடம்?''

''விஷ்ணு! பீ சீரியஸ்...''

''ஸாரி மேடம்... அந்தப் பாட்டு எனக்கு ரொம்பவும் பிடிக்கும். அதான் கேட்டேன்...''

''விஷ்ணு...! உன்னோட பாஸ் எதுக்குமே டென்ஷன் ஆக மாட்டார். அவரே இந்தப் பாட்டுக்களைக் கேட்டா டென்ஷனாயிடறார். ஃபோன்ல நாட்டுப் பாடல்களைப் பாடற அந்த ஆள் யாரு...? அவன் எதுக்காக ஃபோன் பண்ணி பாடணும்?''

விஷ்ணு சில விநாடிகள் யோசித்து விட்டு ரூபலாவை ஏறிட்டான்.

''இதைக் கண்டுபிடிக்க ஒரே வழிதான் இருக்கு மேடம்...''

''சொல்லு...''

''பாஸே வாயைத் தொறந்து சொன்னாத்தான் உண்டு...''

''உன்னைப் போய் நான் கேட்டேன் பாரு...''

''மேடம்...! பாஸ் கடந்த ரெண்டு நாட்களாவே நார்மலாயில்லைன்னு எனக்கும் தெரியும். ஃபோன்ல நாட்டுப் பாடல்கள் கேட்கிறதுக்கும், கருகிப் போன அந்தக் கால் கிடைச்சதுக்கும் ஏதாவது ஒரு சம்பந்தம் இருக்கும்ன்னு என் மனசுக்குப் படுது...''

''சரி... கருகிப் போன அந்தக் கால் கேஸ்ல செத்துப் போன பெண் யார்ன்னு தெரிஞ்சுதா...?''

''இல்ல மேடம்... அந்தக் கேஸ் ஒரே கும்மிருட்டு. செம்பாக்கம் கிராமத்தில இருக்கிற எல்லா கரும்புத் தோட்டங்களையும் 'டாக்' ஸ்க்வாடை வெச்சு அலசிப் பார்த்தாச்சு... அப்படியொரு சம்பவம் அந்த இடத்துல நடந்த மாதிரியே தெரியலை...'' விஷ்ணு மேற்கொண்டு பேசும் முன்பு குளியலறையிலிருந்து ஈரத்தலையை துவட்டிக் கொண்டே விவேக் வெளிப்பட்டான்.

''குட்மார்னிங் பாஸ்... நீங்க சொன்ன மாதிரியே ஏழு மணிக்கு வந்துட்டேன்... வயித்துக்கு இன்னமும் பெட்காப்பியைக் கூட காட்டலை...''

''ரூபி...! அவனுக்கு மொதல்ல காப்பியைக் கொடு...''

''வேண்டாம் பாஸ்... காப்பி சாப்பிட்டா டிஃபன் சாப்பிட முடியாது...''

''என்னது! டிஃபனா...? டிஃபன் எல்லாம் உட்கார்ந்து சாப்பிட்டுக்கிட்டு இருக்க முடியாது. நாம உடனடியாய் கிளம்பி ஏர்போர்ட்டுக்குப் போறோம்...''

''எதுக்கு பாஸ்...?''

''உனக்கும் எனக்கும் இன்னிக்கு அங்கேதான் ட்யூட்டி...''

''யாராவது வர்றாங்களா பாஸ்...?''

''ம்...''

''யாரு...?''

''ஹென்றி ஹைமன்...''

விஷ்ணுவும், ரூபலாவும் குழப்பமாய்

ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஹென்றி ஹைமனா...! யாரது பாஸ்...?''

விவேக் புன்னகைத்தான். ''உனக்கு சுஷ்மிதா சென், ரகஸியா, பிபாசு, நவ்யா நாயர் மாதிரியான பேர்களைச் சொன்னா பளிச்ன்னு புரியும். ஹென்றி ஹைமன் பேரைச் சொன்னா இப்படித்தான் முழிப்பேன்னு எனக்கு நல்லாவே தெரியும். இன்னிக்கு காலையில் பேப்பரைப் பார்த்தியா...?''

''இல்ல பாஸ்...''

''அதோ... சோபாவில் கிடக்கிற அந்த பேப்பரை எடுத்து ரெண்டாம் பக்கம் என்ன நியூஸ் போட்டிருக்கான்னு பாரு...''

விஷ்ணு சோபாவுக்குப் போய்- பேப்பரை எடுத்து இரண்டாவது பக்கத்தைப் பிரித்துப் பார்த்தான்.

''நியூஸ் போட்டிருக்கான் பாஸ்...''

''படி...''

''இளம்பெண் கதறக் கதற கற்பழிப்பு. பட்டப்பகலில் பயங்கரம். 90 வயது சாமியார் கைது''

''டேய்...! அந்த பாடாவதி நியூஸுக்கு மேல பாருடா...''

பார்த்தான்.

''ஹென்றி ஹைமன் இங்கே இருக்கார் பாஸ்...''

''படி...''

''மகாத்மா காந்தி விருது பெறும் அமெரிக்க டாக்டர் ஹென்றி ஹைமன் இன்று சென்னை வருகை. சிறப்பாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் தீவிரம்...''

விஷ்ணு படிப்பதை நிறுத்த, விவேக் முறைத்தான்.

''மேல படிடா...''

''டாக்டர் ஹென்றி ஹைமன் மருத்துவத் துறையில் புரிந்த பல சாதனைகளுக்காகவும் ஏழை மக்களுக்கு இலவசமாய் மருத்துவம் பார்த்து பல உயிர்களைக் காப்பாற்றியதற்காகவும் இந்தியாவின் உயர்ந்த விருதான மகாத்மா காந்தி விருது வழங்கப்படுகிறது. எழுபது வயதான டாக்டர் ஹென்றி இதுபற்றி



கூறுகையில், 'விருதுகளையும் பாராட்டுகளையும் நான் என்றுமே விரும்பியது இல்லை. ஆனால் இந்தியாவின் உன்னத புருஷரான மகாத்மா காந்தியின் பெயரில் கொடுக்கப்படும் இந்த விருதுக்கு நான் தேர்ந்து எடுக்கப்பட்டது ஒரு கௌரவத்துக்குரிய விஷயம். இதற்காக இந்திய மக்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்' ''

விஷ்ணு படிப்பதை நிறுத்திவிட்டு விவேக்கை ஏறிட்டான்.

''என்ன பாஸ்...! விருது வாங்க ஒரு அமெரிக்க டாக்டர் வர்றார். இது ஒரு நியூஸா...? உப்புசப்பில்லாத நியூஸ்!''

விவேக் மெல்லச் சிரித்தான். ''இந்த உப்புசப்பில்லாத நியூஸுக்குப் பின்னாடி ஒரு பயங்கரம் சம்மணம் போட்டு உட்கார்ந்திருக்கு...''

''பாஸ்... என்ன சொல்றீங்க...?''

''இந்திய உளவுத் துறை கொடுத்த ஒரு தகவலின்படி இனி வரப்போகும் ஒரு வார காலத்திற்குள் தேசிய அளவில் பிரபலமான ஒரு முக்கிய பிரமுகரும், வெளிநாட்டிலிருந்து வரப்போகும் விஞ்ஞானி ஒருவரும் கொடூரமான முறையில் கொல்லப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கு... இந்த சதித்திட்டத்துக்குப் பின்னால் இருக்கிற நபர்கள் யார்ன்னு உளவுத் துறைக்குத் தெரியலை. அதைக் கண்டுபிடிக்கக் கூடிய ஒரு முக்கியமான பொறுப்பைத்தான் டி.ஜி.பி. எனக்கு கொடுத்திருக்கார். உளவுத் துறை கொடுத்த தகவலின்படி ஹிட் லிஸ்ட்டில் இருக்கும் அந்த வெளிநாட்டுக்காரர் டாக்டர் ஹென்றி ஹைமன் ஒரு விஞ்ஞானி. அவருடைய உயிர்க்கு ஆபத்து ஏற்படலாம்ன்னு அரசு கருதி பாதுகாப்பு ஏற்பாடுகளை விரிவா பண்ணியிருக்கு... அதுல ஒரு பார்ட்தான் நீயும் நானும் இப்ப ஏர்போர்ட் கிளம்பிட்டிருக்கிறது...''

''என்ன பாஸ்...! கடந்த நாலு நாளாக உங்க கூடவே பொறைக்கு அலையற நாய் மாதிரி சுத்திட்டிருக்கேன்.

நீங்க விஷயத்தை கசியவே விடலையே...?''

''முதல் மூணு நாளைக்கு விஷயத்தை கசிய விடக்கூடாதுங்கிறது உளவுத் துறை டைரக்டரின் கட்டளை. நான்காவது நாள் நம்பிக்கையான நபர்களிடம் மட்டும் சொல்லி வைக்கலாம்...''

ரூபலா குறுக்கிட்டாள்.

''என்னங்க... ஃபோன்ல ஒருத்தன் நாட்டுப் பாடல்கள் பாடி டார்ச்சர் கொடுத்தானே... அவன் யாரு...?''

விவேக் சிரித்தான். ''அவன்னு சொல்லாதே! 'அவர்'ன்னு சொல்லு... ரூபி!''

''அவரா...?''

''ஆமா...! ஃபோன்ல ஜனகனமண, தாயின் மணிக்கொடி மாதிரியான நாட்டுப்பாடல்களைப் பாடியது உளவுத்துறையின் டெப்டி டைரக்டர் ப்ரசன்ன வெங்கடேஷ்...! இது ஒரு வகையான 'கோட்' வேர்ட்ஸ். சங்கேத வார்த்தைகள். அது எனக்கும் அவர்க்கும் மட்டுமே புரியும். தேசிய அளவில் எந்த ஒரு தலைவரின் உயிர்க்காவது ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவானால் அதை அவர் எனக்கு சூசகமாய் இப்படித்தான் தெரிவிப்பார். அது வெறும் வதந்தியாக இருந்தால் ஒரு பாட்டோடு அந்த ஃபோன் கால் முடிந்து விடும். கொலைத் திட்டம் பற்றிய தகவல் உண்மையென்றால் மட்டுமே நாட்டுப் பாடல்கள் தொடரும். நாலு நாளைக்கு முன்னால விஷ்ணுவும் நானும் மதுராந்தகத்திலிருந்து திரும்பும்போது உளவுத் துறையின் டெப்டி டைரக்டர் என்னோட செல்லுக்கு ஃபோன் பண்ணியிருக்கார். செல் எடுக்காமல் போகவே, வீட்டுக்கு ஃபோன் பண்ணியிருக்கார். எப்படியும் என் காதுக்கு விஷயம் போகணும்கிறதுக்காக உன் கிட்டயே 'ஜனகனமண, தாயின் மணிக்கொடி' பாடியிருக்கார். அதுக்கப்புறம் என் செல் சரியாகிவிட எனக்கே ஃபோன் பண்ணி பாட ஆரம்பிச்சுட்டார். தொடர்ந்து நாலு நாளைக்கு இதுமாதிரி பாடல்கள் வந்தால் ஐந்தாவது நாள் அவரை நான்



தனிமையில் சந்திச்சுப் பேசணும். ஃபோனில் பேசினால் ஏதாவது 'கிராஸ்டாக்' ஆகிவிடுமே என்கிற பயம் உளவுத் துறைக்கு எப்போதுமே உண்டு...''

ரூபலா பிரமிப்போடு கேட்டுக் கொண்டிருக்க, விஷ்ணு இடைமறித்தான்.

''பாஸ்...! ஹிட்லிஸ்ட்டில் இருக்கிற ரெண்டு பேரில் ஒருத்தர் வெளிநாட்டு விஞ்ஞானி. இன்னொருத்தர் நாடறிந்த அரசவைப் பிரமுகர்ன்னு சொன்னீங்க... அந்த அரசியல் பிரமுகர் யாரு?''

''அதுதான் இப்ப தலைவலியே! நாட்டில் ஏகப்பட்ட அரசியல் தலைவர்கள் இருக்காங்க... இதுல ஹிட்லிஸ்ட்ல இடம் பெற்று இருக்கிற அந்த தலைவர் யார்ன்னு தெரியலை. உளவுத் துறை மேற்கொண்டு தகவல்களை சேகரம் பண்ண மும்முரமா இயங்கிட்டிருக்கு. அதுக்குள்ளே இந்த வெளிநாட்டு விஞ்ஞானி ஹென்றி ஷைமனின் சென்னை விஜயம். அவரை பத்திரமா காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சென்னை போலீஸுக்கு இருக்கு. ஹென்றி ஷைமன் சென்னையில் ஒரு நாள் தங்கல். நாளைக்கு காலையில் டெல்லிக்குப் பயணம். நாளை கழிச்சு மறுநாள் டெல்லியில் மகாத்மா காந்தி விருது வழங்கும் விழா. விழாவை முடிச்சுட்டு அவர் அமெரிக்காவுக்கு பயணமாகிற வரைக்கும் அவரோட சுண்டு விரலுக்குக் கூட காயம் ஏற்பட்டுவிடக் கூடாதுன்னு வெளியுறவு அமைச்சர் சொல்லியிருக்கிறார். பட், என்ன நடக்கும்ன்னு தெரியலை...''

விவேக் சொல்லிக் கொண்டிருக்கும் போதே டீபாயின் மேல் இருந்த டெலிஃபோன் குரல் கொடுத்தது.

''அநேகமாய் இது உளவுத் துறை ஃபோன்கால் தான்...'' விவேக் சொல்லிக் கொண்டே ரிஸீவரை எடுத்தான்.

''எஸ்...''

ஒரு ஆண்குரல் கேட்டது.

''மிஸ்டர் விவேக்...?''

''ஸ்பீக்கிங்...''

''விவேக்... நான் டாக்டர் சீதாராமன். டீன் ஆஃப் ஜி. ஹெச் ஹாஸ்பிடல்...''

''ஓ! டாக்டர்... நீங்களா... குட்மார்னிங்...!''

''குட்மார்னிங்...! மிஸ்டர் விவேக்... நீங்க இப்ப ஃப்ரீன்னா ஒரு ரெண்டு நிமிஷம் பேசலாமா?''

''தாராளமா பேசலாம் டாக்டர்...''

''நாலைஞ்சு நாளைக்கு முன்னால் நெருப்பில் கருகிப் போன கால் ஒண்ணை போஸ்ட் மார்ட்டம் பண்ணி ரிப்போர்ட் கொடுத்தோம் இல்லையா?''

''ஆமா... டாக்டர்...! ரிப்போர்ட்ல கூட இது மர்டராய் இருக்கலாம் என்கிற ஒபீனியனை சொல்லியிருந்தீங்க...''

''அந்த கேஸ்ல ஏதாவது ப்ராக்ரஸ் இருக்கா மிஸ்டர் விவேக்...?''

''இல்லை டாக்டர்... கேஸ் எந்த இடத்துல ஆரம்பமாயிற்றோ அதே இடத்துலதான் இன்னமும் இருக்கு...''

''இஃப் யூ டோண்ட் மைண்ட், நான் ஒரு கருத்தைச் சொல்லலாமா?''

''சொல்லுங்க டாக்டர்...''

''அது ஒரு பெண்ணோட கால் என்கிற கோணத்தில் அந்த கேஸை இன்வெஸ்டிகேட் பண்ண வேண்டாம்...''

''தென்... அது ஒரு பெண்ணோட கால் தானே?''

''அது ஒரு பெண்ணோட கால்ன்னு எதை வெச்சு முடிவுக்கு வந்தீங்க மிஸ்டர் விவேக்...?''

''காலில் கொலுசு இருந்ததே...!''

''கொலுசு இருந்தா அது ஒரு பெண்ணோட கால் ஆயிடுமா...?''

''டாக்டர்...! நீங்க இப்ப என்ன சொல்ல வர்றீங்க...?''

''அது ஒரு ஆணோட கால். கேஸை திசை திருப்பறதுக்காக டெட்பாடியை எரிக்கும் போது காலுக்கு கொலுசைக் கட்டியிருக்காங்க...''



உளவு பார்ப்பதில் கெட்டிக்கார நாடு அமெரிக்கா மட்டுமே. இது இரண்டு வகையான உளவு ஸ்தாபனங்களை வைத்துள்ளது. ஒன்றின் பெயர் எஸ்.ஆர்.-71. இன்னொன்றின் பெயர் யூ.2. இந்த இரண்டுமே விமானங்களில் இயங்குகின்றன. இந்த விமானங்கள் எண்பதாயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டே தன்னிடம் உள்ள சக்தி வாய்ந்த காமிராக்களின் உதவியால் கீழே ராணுவ முகாமில் இருக்கும் ஒரு ராணுவ வீரரைக் கூட க்ளோஸப்பில் படம் எடுத்துவிட முடியும்.




வீட்டு வாசலில் ஆட்டோ சத்தம் கேட்டதுமே நான் சர்வாங்கமும் நடுங்கிப் போய் இருட்டில் அப்படியே நின்றேன்.

'கஜபதியைத் தேடிக் கொண்டு இந்நேரத்துக்கு யார் வருகிறார்கள்?'

நான் வேகவேகமாய்ப் போய் கதவை மெல்லத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தேன். இருட்டில் ஆட்டோ ஒன்று நின்றிருக்க, அதிலிருந்து ஒரு பெண் இறங்கிக் கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்தேன். புரிந்து போயிற்று.

பலான பெண். வாடிக்கையாய் வந்து போகிறாள் என்பது நடையிலேயே தெரிந்தது.

நான் கதவை சத்தம் வராமல் மூடி தாழ்ப்பாள் போட்டேன். அப்படியே கதவுக்கு சாய்ந்து நின்றேன்.

வெளியே சில விநாடிகளுக்கு நிசப்தம். பின்பு கதவை மெதுவாய் தட்டும் சத்தம் கேட்டது. கொஞ்சலாய் குரல்.

''கஜா... கஜா...''

கஜபதியைத்தான் அழைக்கிறாள்.

'என்ன செய்யலாம்? கதவைத் திறக்காமல் இருக்க முடியாது. ஏதாவது பேசியாக வேண்டும்...'

''கஜா... கஜா...'' அந்தப் பெண்ணின் குரல் இப்போது உயர்ந்து, கதவும் பலமாய் தட்டப்படும் சத்தம் கேட்டது.

இனிமேலும் மௌனமாய் இருக்க முடியாது. கஜபதியின் குரலிலேயே பேசிவிட வேண்டியதுதான்.

நான் கதவைத் திறக்காமல் ஒட்டி நின்றபடி குரல் கொடுத்தேன். ''யா... யாரு...?'' தூக்க கலக்க குரல்.

''க... க... கஜா... நான்தான்...''

''நா... நான்தான்னா... யாரு...?''

''நான்... சரோஜா...''

''நீ... நீயா... இப்ப எதுக்காக வந்தே...?''

''உன்கிட்டே எதுக்கு வருவேணாம்... வந்து நாளாச்சுன்னு வந்தேன். கதவைத் தொற கஜா...''

''இதோ பார் சரோஜா... இன்னிக்கு ஒண்ணும் வேண்டாம்... நான் ஒரு பிரச்னையில் மாட்டிகிட்டு இருக்கேன். என்னைத் தேடிக்கிட்டு போலீஸ் எந்த நிமிஷமும் வரலாம்...''

''யோவ்...! நீ என்னய்யா சொல்றே...? போலீஸ் உன்னைத் தேடிக்கிட்டு வருமா?''

''ஆமா... என் ஃப்ரண்ட் ஒருத்தனை யாரோ கொலை பண்ணிட்டாங்க. அது சம்பந்தமா போலீஸுக்கு என்மேல சந்தேகம் திரும்பியிருக்கிறதாய் கேள்விப்பட்டேன். போலீஸ் எப்ப வேணுமின்னாலும் இங்கே வரலாம்... என்னை அரஸ்ட் பண்ணலாம். நீயும் என்கூட இருந்தா உன்னையும் அள்ளிட்டுப் போயிடுவாங்க... நீ கிளம்பு. ரெண்டு நாள் கழிச்சு நானே வந்து உன்னைப் பார்க்கிறேன்...''

''நீ மெதுவாவே வா கஜா... ஒண்ணும் அவசரம் இல்லை. நான் கிளம்பறேன்...!'' சரோஜா வேகமாய் ஓடும் சத்தமும் அதைத் தொடர்ந்து ஆட்டோ கிளம்பும் சத்தமும் கேட்டது.

இரண்டு நிமிஷத்துக்குப் பிறகு நான் இயல்புக்கு வந்தேன். பெருகிக் கொண்டிருந்த வியர்வை நின்றது.

'கரண்ட் எப்போது வரும்...?'

சுவர்க்கு சாய்ந்தபடி காத்திருக்க ஆரம்பித்தேன்.



மனிதனின் நரம்பு மண்டலம் எத்தனை மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது தெரியுமோ...? மூன்று மண்டலங்களாக! அவை எது எது என்று பார்ப்போமா...? 1) சென்ட்ரல் நெர்வஸ் சிஸ்டம். 2) அட்டானமிக் நெர்வஸ் சிஸ்டம். 3) பெரிபெரல் நெர்வஸ் சிஸ்டம்.




விவேக்கின் திகைப்பு உச்சத்துக்குப் போயிற்று.

''டாக்டர்...! நீங்க சொல்றது உண்மையா...? அது ஒரு ஆணோட காலா...?''

''எஸ்... போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் இந்த உண்மையை வெளிப்படுத்தினா [illegible] மீடியா மூலமாய் பத்திரிகைகளுக்கு போய் கொலையாளி உஷாராயிடலாம்ன்னு நினைச்சுத்தான் அதை ரிப்போர்ட்டில் மென்ஷன் பண்ணலை...''

''டாக்டர்... அது ஒரு ஆணோட கால் என்பதை எதை வெச்சு முடிவு பண்ணீங்க...?''

''பெண்களோட மஸில் ஃபைபர்ஸுக்கும், ஆண்களோட மஸில் ஃபைபர்ஸுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு... அதேபோல் எலும்போட உறுதியை வெச்சும் அது ஒரு பெண்ணோட காலா, ஆணோட காலா என்கிற முடிவுக்கு வரலாம். கடந்த நான்கு நாட்களாய் சில சோதனைகளை செய்து பார்த்ததில் அது ஒரு ஆணோட கால் என்கிற தீர்க்கமான முடிவுக்கு வர முடிஞ்சுது. கேஸை நீங்க அந்தக் கோணத்திலேயே இன்வெஸ்டிகேட் பண்ணினாத் தான் கொலையாளியை நெருங்க முடியும்...''

''தேங்க்யூ டாக்டர்...! சரியான நேரத்துல ஒரு சரியான தகவலைக் கொடுத்த உங்களுக்கு என்னோட நன்றி...'' விவேக் ரிஸீவரை வைத்துவிட்டு டாக்டர் சொன்ன விபரத்தை விஷ்ணு, ரூபலாவிடம் சொல்ல, விஷ்ணு

படபடத்தான்.

"நான் அப்பவே நினைச்சேன் பாஸ்... கால் கருகிப் போனாலும் கர்லாக் கட்டை மாதிரி இருக்கேன்னு...! கால்ல கொலுசு இருக்கப் போய் ஏமாந்துட்டேன் பாஸ்..."

"இந்தக் கேஸ் இப்போ முக்கியம் இல்லை. இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ளே சென்னை வரப்போகிற ஹென்றி ஹைமன்தான் முக்கியம். கிளம்பு ஏர்போர்ட்டுக்கு..."

ரூபலா குறுக்கிட்டாள்.

"என்னங்க காப்பி...?"

"அதெல்லாம் ஏர்போர்ட்டுக்குப் போய் பார்த்துக்கிறோம். விஷ்ணு... கிளம்புடா..."

புறப்பட்டார்கள்.

மாருதி ஜென் ஏர்போர்ட்டை நோக்கிப் பறந்தது. கார் கிண்டியைத் தாண்டியது.

"பாஸ்..." விஷ்ணு கூப்பிட்டான்.

"என்ன...?"

"இந்த கருகின கால் கேஸை நான் பார்த்துக்கறேன் பாஸ். நீங்க இந்த ஹென்றி ஹைமனைப் பார்த்துக்குங்க. 'மகாத்மா காந்தி விருது' வாங்க வர்ற ஒரு வெளிநாட்டு விஞ்ஞானி இந்திய மண்ணில் ரத்தம் சிந்தக் கூடாது. அப்படி சிந்தினா அது ஒவ்வொரு இந்தியனுக்கும் கேவலம். அவங்க யார் பாஸ்...? தீவிரவாதிகளா...?"

"இல்லைன்னு உளவுத் துறை சொல்லுது..."

"அப்படீன்னா வேற யாரு பாஸ்...?"

"தெரியலை. அதைக் கண்டுபிடிக்கத்தான் ஏர்போர்ட் போறோம். ஏர்போர்ட்ல எவனாவது வித்தியாசமா பார்வைக்கு கிடைச்சா அமுக்கிட வேண்டியதுதான்..."

"எதிரி ஏர்போர்ட்டுக்கு வருவான்னு நினைக்கறீங்களா பாஸ்?"

"கண்டிப்பா வருவான். பட், அவன் யார்ன்னு கண்டுபிடிக்கிறதுதான் கஷ்டம். அந்தக் கஷ்டமான வேலையைத் தான் இப்போ பார்க்கப் போறோம்..."



"பாஸ்...! ஹிட் லிஸ்ட்ல இருக்கிற அந்த இன்னொரு வி.வி..ஐ.பி. பிரமுகர் யாராய் இருக்கும்னு நினைக்கறீங்க...?"

"நான் ஒருத்தரை கெஸ் பண்ணி வெச்சிருக்கேன். பட், அவராகத்தான் இருக்கணும்னு கிடையாது..."

"அது யார் பாஸ்...?"

"உனக்கு ஓட்டை வாய்! வேண்டாம்..."

"என்ன பாஸ் இது...? சுடிதார்களைப் பார்க்கிற போது மட்டும்தான் எனக்கு ஓட்டை வாய். மத்த நேரங்களில் ஸேஃப்டி லாக்கர்"

"நான் உளவுத் துறை கிட்டே என்னோட சந்தேகத்தை சொன்னேன். 'அவர்க்கு கூடுதல் பாதுகாப்பு தரணும்'னு சொன்னேன். அவங்க என்னோட கருத்தை ஒத்துக்கலை. ஹிட் லிஸ்ட்ல இருக்கிறது அவராய் இருக்க முடியாதுன்னு சொல்லிட்டாங்க..."

"பாஸ்...! எனக்கு மண்டை வெடிச்சுடும் போலிருக்கு. அவர் யார்ன்னு இப்ப சொல்லப் போறீங்களா, இல்லையா?"

"நீ என்னோட அசிஸ்டண்ட் தானே... உனக்கு எத்தனை வருஷ சர்வீஸ்...?"

"ஒரு மாமாங்கம்..."

"இப்ப இருக்கிற அரசியல் சூழ்நிலைகளை வெச்சு அவர் யாராய் இருக்கும்னு கெஸ் பண்ணு பார்க்கலாம்..."

விஷ்ணு தன் முன் மண்டையையும் பின் மண்டையையும் முறையே பத்து விநாடிகள், பதினைந்து விநாடிகள் தட்டி விட்டு விவேக்கை ஏறிட்டான்.

"ஒரு க்ளூ கொடுங்க பாஸ்..."

"அவர்க்கு அரசியல் வட்டாரத்தில் ஒரு செல்லப் பேர் இருக்கு. 'அலங்கார பொம்மை'ன்னு சொல்லுவாங்க..."

"ஆணா... பெண்ணா... பாஸ்?"

"ஆண்"

விஷ்ணு யோசிக்க ஆரம்பித்தான்.



இமயமலையின் அடிவாரத்திலிருந்து அமர்நாத் பனிக் குகைக்கு செல்ல செங்குத்தான பனிப்பாறைகளுக்கு நடுவே எவ்வளவு தூரம் நடக்க வேண்டும் தெரியுமா...? நாற்பது கிலோமீட்டர். அமர்நாத் பனிக் குகையில் மலைப் புறாக்களைத் தவிர வேறு எந்த உயிரினமும் கிடையாது.

மின்சாரம் வருகிற மாதிரி தெரியவில்லை.

மேலும் பத்து நிமிஷம் நான் காத்திருந்து பார்த்துவிட்டு பிறகு பொறுமையில்லாமல் அறைக்குள் தீப்பெட்டி கிடைக்குமா என்கிற முயற்சியில் இறங்க ஆரம்பித்தேன். இருட்டில் மெல்ல நடந்து மேஜை இருக்கிற பக்கம் போய் பொருள்களை தடவிப் பார்த்தேன். தீப்பெட்டியைத் தவிர வேறு எது எதுவோ கைக்கு கிடைத்தது.

அலமாரியில் இருக்குமோ?

அலமாரி இருக்கும் திசையை அனுமானித்துக் கொண்டு இடது பக்கமாய் மெல்ல நடந்தேன்.

பத்தடி நடந்திருப்பேன்.

'ச்சொத்!'

என் வலது கால் பாதம் எதையோ ஈரமாய், கொழகொழப்பாய் மிதித்தது.

குனிந்து பார்த்தேன். மூளைக்குள் மின்சாரம் பாய்ந்த உணர்வு.

கஜபதியின் தேங்கியிருந்த ரத்தத்தில் காலை வைத்து இருந்தேன்.

'என்ன செய்யலாம்?'

வேறு வழியில்லை. வீட்டின் வெளிப்பக்கம் இருக்கிற குளியலறைக்குப் போய் காலைக் கழுவி சுத்தம் பண்ணிக் கொண்டு வரவேண்டியது தான்.

ரத்தத்தை மிதித்த காலோடு வீட்டின் பின்பக்கம் வந்து



அரையிருட்டில் குளியலறையை நோக்கிப்போனேன். மூடியிருந்த தகரக் கதவோடு குளியலறை வந்தது. உள்ளே நுழைந்தேன். தொட்டியில் இருந்த தண்ணீரை எடுத்து காலைக் கழுவிக் கொண்டு இருக்கும் போது மனசுக்குள் மத்தாப்பு சிதறல்களாய் யோசனைகள்.

'கைரேகைகளை இந்த இருட்டில் தேடி அழித்துக் கொண்டு இருப்பதால் ஒரு பிரயோசனமும் இல்லை...!'

'கஜபதியின் உடம்பு போலீஸுக்கு கிடைத்தால்தானே இன்வெஸ்டிகேஷன் என்ற பெயரில் சந்தேகங்கள் கிளம்பும்...? கஜபதியை யார்க்கும் தெரியாதபடி டிஸ்போஸ் செய்து விட்டால்...?'

'எப்படி டிஸ்போஸ் செய்வது...?'

'பாடியைக் கொண்டு போக ஏதாவது வாகனம் வேண்டுமே...?'

காலைக் கழுவி முடித்து யோசித்துக் கொண்டே குளியலறையை விட்டு வெளியே வந்தேன். சில நிமிஷ யோசனைக்குப் பின் சட்டென்று அமீர் ஞாபகம் வந்தது. அமீர் யார் என்று கேட்கிறீர்களா?

இங்கிருந்து இரண்டாவது கிலோமீட்டரில் ஹைவேஸ் ரோட்டில் 24 மணி நேரமும் செயல்படும் அமீர் ஆட்டோமொபைல்ஸ் ஒர்க்ஷாப்பின் ஓனர்தான் அமீர். பால்ய காலத்து சிநேகிதன். அவனிடம் சர்வீஸுக்கு வரும் கார்களை எடுத்துக் கொண்டு ஜாலியாய் சுற்றுவது என் வழக்கம். கடந்த ஆறு மாத காலமாய்த்தான் அவனிடம் போவது இல்லை. சர்வீஸ் முடிந்து ஏதாவது ஒரு கார் டெலிவரி கொடுக்க தயாராக இருக்கும். போய்க் கேட்டால் ஏன் எதற்கு என்று கேள்விகளை எழுப்பாமல் கொடுத்து விடுவான்.

கஜபதியின் வீட்டுக் கதவை வெளிப்பக்கம் தாழிட்டு விட்டு மறுபடியும் வேக வேகமாய் நடை போட்டு ஹைவேஸ் ரோட்டுக்கு வந்தேன். லாரிகள் ரோட்டை அரைத்துக் கொண்டு எதிரெதிர் திசைகளில் ஓடிக் கொண்டிருக்க, நான் வேர்த்து விறுவிறுத்துப் போய் நடந்தேன்.

இருபது நிமிஷ நடை.

அமீர் ஆட்டோமொபைல்ஸ் சோகையான ட்யூப்லைட் வெளிச்சத்தோடு வந்தது. தகரத்தாலான காம்பௌண்ட் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனேன். வரிசையாய் உடல்நலம் சரியில்லாத நான்கைந்து கார்கள் தெரிய, இரண்டு மெக்கானிக்குகள் உள்ளே படுத்து வாய் பிளந்த நிலையில் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

'அமீர் எங்கே...?'

சுற்றும் முற்றும் பார்த்தேன். பார்வைக்குக் கிடைக்காமல் போகவே, உள்ளேயிருந்த ஷெட்டை நோக்கிப் போனேன். ஷெட்டை நெருங்கியபோது குறட்டைச் சத்தம் கேட்டது.

இது அமீர்தான்! அவன்தான் இப்படி குறட்டை விடுவான்.

கதவைத் தள்ளினேன். கயிற்றுக் கட்டிலில் வெறும் லுங்கி அணிந்து கொண்டு பெரிய தொப்பையோடு மல்லாந்து படுத்திருந்தான் அமீர். காற்றில் மோசமான சாராயம் நாறியது. கட்டிலுக்குக் கீழே இரண்டு காலி பாட்டில்கள். வாழையிலையில் மீதிப் பிரியாணி. கடித்துத் துப்பிய எலும்புத் துண்டுகள். பாதி உடம்பு தேய்ந்து போன பீடிகள்.

நான் பக்கத்தில் போய் நின்று அவனுடைய புஜத்தைப் பற்றி உலுக்கினேன்.

''டேய் அமீர்...''

''......''

''அமீர்...''

''ம்...''

''எந்திரிடா...''

''யாரு...?'' கண்ணைத் திறக்காமலேயே குழறினான்.

''நான் தாண்டா தினேஷ்...''

அந்த போதையிலும் என்னைத் தெரிந்து கொண்டான். எழ முயன்று முடியாமல் அப்படியே படுத்துக் கொண்டான். பாதிக் கண்ணைத் திறந்து கேட்டான்.

''என்னடா இந்த நேரத்துல...?''

''ஒரு வண்டி வேணும்டா! ரெண்டு மணி



நேரத்துக்குள்ளே கொண்டு வந்து குடுத்துடறேன்...''

''என்ன எவனையாவது தள்ளிகிட்டு போறியா...?''

''சேச்சே...! சிட்லபாக்கத்துல ஒருத்தரைப் பார்க்க வேண்டியிருக்கு. என்னோட பைக் மக்கர். அதான்...''

''கார் எதுவும் கிடையாது. மாருதி ஆம்னி இருக்கு. எடுத்துட்டுப் போறியா...?''

''எதுவாயிருந்தாலும் பரவாயில்லை...''

''ரெண்டு மணி நேரத்துக்குள்ளே வந்துடுவியா...?''

''அதுக்கு முன்னாடியே வந்துடுவேன்...''

''வண்டியோட சாவி அந்த மேஜை டிராயர்ல இருக்கு. எடுத்துக்கோ. பெட்ரோல் அந்த கேன்ல இருக்கு. எடுத்து ஊத்திக்க. வண்டியை வேகமா ஓட்டாதே. பிரேக் சிஸ்டத்துல கொஞ்சம் பிராப்ளம் இருக்கு...''

''சரி... சரி... நான் பார்த்துக்கறேன்...'' மேஜை டிராயரைத் திறந்து சாவியை எடுத்துக் கொண்டேன்.

''அமீர்! வரட்டா...?''

''ம்... ம்...'' அமீர் முனகிக் கொண்டே குப்புறப்படுத்துக் கொள்ள, நான் ஷெட்டின் ஓரத்தில் இருந்த பத்து லிட்டர் பெட்ரோல் கேனை எடுத்துக் கொண்டேன்.

ஐந்து லிட்டர் வேனுக்கு. ஐந்து லிட்டர் கஜபதியின் உடலுக்கு.

மரத்தடிக்கு கீழே நின்றிருந்த அந்த சிவப்பு நிற மாருதி ஆம்னி வேனை நோக்கிப் போனேன்.

உலகத்தில் உள்ள எரிமலைகளிலேயே அழகான எரிமலை எது தெரியுமோ? மவுண்ட் ப்யூஜி. (MOUNT FUJI) இந்த எரிமலை ஜப்பானில் உள்ளது.




விவேக்கும், விஷ்ணுவும் ஏர்போர்ட் வந்து சேர்ந்தார்கள்.

''பாஸ்...! நீங்க சொன்ன அந்த 'அலங்கார பொம்மை' யார்ன்னு தெரியலை. நீங்களே சொல்லிடுங்க...''

''அது அப்புறம்! மொதல்ல ஹென்றி ஹைமனைப் பார்ப்போம். அவர் சென்னையில் தங்கியிருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் டென்ஷன் தான். அவர் டெல்லி புறப்பட்டு போன பிறகுதான் சாப்பாடும், தண்ணீரும் வயிற்றுக்குள்ளே இறங்கும்...''

ஏர்போர்ட் லௌன்ஞ்சுக்குள் நுழைந்தார்கள். ரன்வேயில் ஒரு விமானம் நின்று கொண்டிருக்க, பயணிகள் பொடி நடை போட்டு அதை நோக்கி போய்க் கொண்டிருந்தார்கள்.

விவேக் கபேடேரியாவை நோக்கிப் போனான். விஷ்ணு ஆச்சர்யமாய்ப் பார்த்தான்.

''என்ன பாஸ்...?''

''மொதல்ல ஒரு கப் காப்பி...''

கும்பலைக் கடந்து ஏர்போர்ட்டின் கோடியில் இருந்த கபேடேரியாவைத் தொட்டார்கள். அட்டை டம்ளர்களில் காப்பியை நிரப்பிக் கொடுத்துக் கொண்டிருந்த அந்த ஊழியரிடம் இரண்டு காப்பி என்று சொன்ன விவேக், கபேடேரியாவில் இருந்த கூட்டம் கலைந்து போனதும் அந்த ஊழியனிடம் மெல்ல பேச்சுக் கொடுத்தான். தாழ்ந்த குரலில் ஆங்கிலம்.

''என்ன ஷிவ்ராம்... நிலைமை எப்படியிருக்கிறது?''

''எதுவும் வித்தியாசமாக இல்லை ஸார்... உடனடியாய் சந்தேகப்படுகிற அளவுக்கு ஏர்போர்ட்டில் யாருமில்லை...''

''ஏர்போர்ட் அதிகாரிகள் உங்களுக்கு நல்ல முறையில் ஒத்துழைப்பு கொடுக்கிறார்களா?''

''ஹென்றி ஹைமனுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்பதில் அவர்களும் முனைப்போடு இருக்கிறார்கள் ஸார்...''

''ஏர்போர்ட் முழுவதும் நம் போலீஸ் துறை ஆட்கள் மொத்தம் எத்தனை பேர் பரவியிருக்கிறார்கள்?''



''பதினெட்டு பேர் ஸார்... வெளியே கார் பார்க்கிங்கிலிருந்து உள்ளே டாய்லெட் செல் வரைக்கும் ஏர்போர்ட் ஊழியர்களாகவே மாறி வந்து போகிற ஒவ்வொரு பயணியையும் உன்னிப்பாய் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.''

காப்பி சாப்பிட ஒரு பயண கும்பல் வரவே விவேக்கும், விஷ்ணும் காப்பி டம்ளர்களோடு ஒதுங்கி அங்கேயிருந்த நாற்காலிகளில் போய் உட்கார்ந்தார்கள். விஷ்ணு காப்பியைக் குடிக்காமல் விவேக்கையே பார்த்தான். பார்வையில் 104 டிகிரி உஷ்ணம்.

''என்னடா கோபமா...?''

''பின்னே என்ன பாஸ்...? நீங்களே தனியா வேட்டையாடறீங்க போலிருக்கு... ஏர்போர்ட்டுக்குள்ளே இவ்வளவு ஏற்பாடுகளைப் ப[illegible] என்கிட்ட நீங்க மூச்சுக் காட்[illegible]''

விவேக் சிரித்தான். ''டெல்லி அதிகாரிகளோட கட்டளை. அந்தக் கட்டளை இன்னிக்கு காலையில் ஆறு மணி வரைக்கும் இருந்தது. அதுக்கப்புறம் நான் பேசி உன்னையும் இந்த கேஸ்ல இன்வால்வ் பண்ணிக்கறதுக்காக பர்மிஷன் கேட்டேன். கொடுத்துட்டாங்க... அவங்க பர்மிஷன் தராத பட்சத்தில் நான் உன்னை ஏர்போர்ட்டுக்கே கூட்டிட்டு வந்து இருக்க மாட்டேன். காப்பியை சாப்பிடுடா... ஆறிடப் போகுது...''

''அந்த 'அலங்கார பொம்மை' யார் பாஸ்?''

''அது வந்து...'' விவேக் பேச வாய் திறந்த விநாடி, சர்ட் பாக்கெட்டில் இருந்த செல்ஃபோன் ரிங்டோனை வெளியிட, விவேக் எடுத்து காதுக்கு ஒற்றினான்.

மறுமுனையில் ஏர்போர்ட் ஆபீஸர் தேவ் பேசினார். ''மிஸ்டர் விவேக்! நீங்கள் இப்போது கபேடேரியாவில்தானே இருக்கிறீர்கள்...?''

''ஆமாம்...''

''உடனே புறப்பட்டு என்னுடைய அறைக்கு

வாருங்கள்...''

''எனிதிங்க் இம்பார்ட்டண்ட்...?''

''வெரி வெரி இம்பார்ட்டண்ட். ப்ளீஸ் கம்...''

விவேக் பாதி காப்பியோடு இருந்த டிஸ்போஸல் டம்ளரை 'வேஸ்ட் பின்'னுக்குள் வீசிவிட்டு எழுந்தான்.

''என்ன பாஸ்...?''

''ஏதோ பிரச்னை... ஏர்போர்ட் ஆபீஸரின் குரலில் நிறைய பதட்டம்...''

''பாஸ்... அந்த 'அலங்கார பொம்மை?''

''வா! சொல்றேன்...''




கம்ப்யூட்டர்களை பயன்படுத்தி செய்யப்படும் குற்றங்களுக்கு 'சைபர் க்ரைம்' என்று பெயர். கம்ப்யூட்டர் புரட்சியால் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. புதிது புதிதாய் குற்றவாளிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றனர். இன்சூரன்ஸ் மற்றும் மருத்துவம் தொடர்பாகவும் பல மோசடிகள் நடக்கின்றன. அத்துடன் இ-மெயில் மூலம் பல பெண்கள் சித்ரவதை செய்யப்படுகிறார்கள். சைபர் க்ரைம் [illegible] கண்டுபிடிக்க புதிய சாஃப்ட்வேர் [illegible] மெஷின் இந்தியா நிறுவனம் தயாரித்துள்ளது.

நான் மாருதி ஆம்னி வேனை விரட்டிக் கொண்டு கஜபதியின் வீடு வந்து சேர்ந்தபோது மின்சாரம் இன்னமும் வராமல் அந்தப் பகுதி முழுவதும் இருட்டாகவே இருந்தது. வேனை நிறுத்திவிட்டு சுற்றும் முற்றும் பார்த்தேன். பார்வைக்கு யாரும் தட்டுப்படாமல் போகவே, விறுவிறுவென்று நடந்து வாசற்படி ஏறினேன்.

காலுக்கு ஏதோ தட்டுப்பட்டது.



'என்ன?'

குனிந்து எடுத்தேன்.

ஒற்றைக் கொலுசு!

என் நெற்றி சுருக்கத்துக்கு உட்பட்டது. 'இங்கே எப்படி இந்தக் கொலுசு...?'

யோசித்தேன். சட்டென்று பிடிபட்டது.

'அந்தப் பலான அழகி சரோஜா சிறிது நேரத்துக்கு முன்பு இங்கே வந்து இருந்தபோது அவள் காலில் இருந்து கழன்று விழுந்து இருக்க வேண்டும்.'

கொலுசை பாக்கெட்டில் போட்டுக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தேன். இருட்டு இப்போது கண்களுக்கு ஓரளவு பழகியிருந்ததால் கஜபதியின் உடல் அந்த இருட்டிலும் ஒரு அவுட்லைன் மாதிரி பார்வைக்கு கிடைத்தது.

பாடியை இழுத்துப் போய் வேனில் ஏற்ற வேண்டும்.

'முடியுமா?'

கீழே குனிந்து கஜபதியின் கால்களைப் பற்றி இழுத்துப் பார்த்தேன். உடல் சுலபமாய் இழுபட்டு வந்தது. அப்படியே வாசல் வரைக்கும் இழுத்துக் கொண்டு போனேன்.

'சலங்'

என் பாக்கெட்டில் இருந்த சரோஜாவின் கொலுசு கீழே விழுந்தது. அதை மறுபடியும் எடுத்து பாக்கெட்டுக்குள் போடப் போன நான் ஒரு விநாடி யோசித்தேன்.

'இந்தக் கொலுசை கஜபதியின் காலிலேயே கட்டி விட்டால் என்ன...?'

'நாளைக்கு ஒருவேளை போலீஸ் கஜபதியின் எரிந்த உடலைக் கண்டுபிடித்தாலும் அது ஒரு பெண்ணின் உடல்தான் என்று நினைத்து விசாரணையை வேறு பக்கம் கொண்டு போய் விடுவார்கள்...?'

நான் கொலுசை கஜபதியின் காலில் கட்டினேன். பிறகு அவனுடைய உடலை மூச்சைப் பிடித்து தூக்கிக் கொண்டு போய் வேனின் பின்பக்கத்தில் போட்டு

கதவை மூடினேன்.

அதே விநாடி-

மின்சாரம் வந்தது.

கடவுளே உனக்கு நன்றி!

வீட்டுக்குள் போய் ரத்தம் படிந்த இடங்களை கவனமாய்ப் பார்த்து சுத்தம் செய்து விட்டு, கைரேகை பட்ட பொருள்கள் எது எது என்று பார்த்து துடைத்து, விளக்கை அணைத்து வீட்டைப் பூட்டிக் கொண்டு வேனுக்கு வந்தேன்.

சில விநாடிகள் நின்று யோசித்தேன். 'எதையாவது மறந்து விட்டோமா...?'

இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு வேனைக் கிளப்பினேன். ஹைவேஸ் ரோட்டில் மேற்காக வண்டியை விரட்டினேன்.

ஐந்து நிமிஷ பயணத்தில் செம்பாக்கம் ஊராட்சி என்னை நிசப்தமாய் வரவேற்றது.

கிராமம் முழுவதும் கரும்புத் தோட்டங்கள் அடர்த்தியாய் தெரிய, ரோட்டோரமாய் வேனை நிறுத்தினேன். வேனில் இருந்த ஐந்து லிட்டர் பெட்ரோலால் கஜபதியின் உடலை நனைத்து பக்கத்தில் இருந்த ஒரு கரும்புக் காட்டுக்குள் இழுத்துப் போட்டேன். ஒரு நெருப்புக் குச்சியை கிழித்து கஜபதியின் உடலில் போட்டேன். உடல் சொக்கப்பனையாய் எரிய ஆரம்பித்ததும் ஓடிப் போய் வேனில் ஏறிக் கொண்டு அதைக் கிளப்பினேன்.

ஹைவேஸ் ரோட்டில் புயல்வேகப் பயணம். பத்தே நிமிஷத்தில் அமீரின் ஒர்க்ஷாப் வந்தது. வேனை வைத்து விட்டு ஷெட்டுக்குள் நுழைந்தேன். அமீர் வாய் பிளந்து அசிங்கமாய் தூங்கிக் கொண்டிருந்தான். எழுப்பினேன்.

''அமீர்...''

''ம்... ம்...'' அமீர் தூக்கம் கலைந்தான்.

''வேனைக் கொண்டாந்து நிப்பாட்டிட்டேன்...''


''ம்... ம்...''

''நான் கிளம்பட்டா...?''



''ம்... ம்...'' சொன்னவன் புரண்டு கைகளையும், கால்களையும் பரப்பிக் கொண்டு குப்புறப்படுத்து தூக்கத்தை தொடர்ந்தான்.

நான் ஒர்க்ஷாப்பை விட்டு வெளியே வந்து என்னுடைய வீட்டை நோக்கி விறுவிறுவென்று நடை போட்டேன்.




பணப்பயிர்களில் ஒன்று தேயிலை. தேயிலைகளில் அதன் கொழுந்துகள் தான் பிரதானம். பணம் சம்பாதித்து தரக்கூடியதும் அந்த கொழுந்துகள் தான். குளிர்ச்சியான சீதோஷ்ண நிலையில் தேயிலையின் இலைகள் பல மணி நேரத்துக்கு கெட்டுப் போகாமல் [illegible] பனியில் [illegible] துளிர்த்துக் கொண்டேயிருக்கும். மேலும் தேயிலைச் செடிக்கு அதன் வேர்களில் நீர் தேங்கக் கூடாது. வடிந்து போய்விட வேண்டும். அதனால்தான் மலைச் சரிவுகளில் தேயிலை அடுக்கடுக்காய் பயிரிடப்படுகிறது.

விவேக்கும், விஷ்ணுவும் ஏர்போர்ட் ஆபீஸர் தேவ் அறைக்குள் நுழைந்தபோது, அவர் வயர்லஸ்ஸில் யாருடனோ இரைந்து பேசிக் கொண்டிருந்தார்.

''நோ... நோ... வெரி ஸாரி...! வீ... ஆர் ஹெல்ப்லஸ். ஆல்ரெடி வீ ஷேவ் டன் ஏ லாட்...! ப்ளீஸ் ட்ரை டூ அண்டர்ஸ்டாண்ட் மீ. கிவ் மீ ஏ கால் ஆஃப்டர் டென் மினிட்ஸ்...''

விவேக், விஷ்ணுவை பார்வையில் வாங்கியதும் வயர்லஸ்ஸை அணைத்து விட்டு வியர்த்த தன் சதைப்பிடிப்பான முகத்தை இரண்டு கைகளாலும் வழித்து விட்டபடி தனக்கு எதிரே இருந்த

நாற்காலிகளைக் காட்டினார்.

''ப்ளீஸ் ஸீட்டட் மிஸ்டர் விவேக்...''

இருவரும் உட்கார்ந்தார்கள்.

தேவ் பெருமூச்சொன்றை வெளியேற்றி விட்டு மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

''மிஸ்டர் விவேக்...! வெளிநாட்டு விஞ்ஞானி ஹென்றி ஹைமன் சென்னைக்கு இப்போது வரப்போவது இல்லை. ஃப்ளைட் பெங்களூருக்குப் போய் விட்டது.''

''காரணம்...?''

தேவ் ஒன்றும் பேசாமல் மேஜையின் மேல் இருந்த ரிமோட் கண்ட்ரோலை எடுத்து ஒரு பட்டனைத் தட்ட, எதிரில் இருந்த டி.வி. திரை உயிர்பெற்றது. தூர்தர்ஷனில் யாரோ ஒரு வித்துவான் வயலின் வாசித்துக் கொண்டிருக்க கீழே ஃப்ளாஷ் நியூஸ் வேகமாய் ஓடிக் கொண்டிருந்தது.

**'தமிழக கவர்னர் தத்தாத்ரேயா பயணம் செய்த ஹெலிகாப்டர் மாயம். கவர்னர் கடத்தப்பட்டாரா...? இன்னும் சில நிமிடங்களில் செய்திகள் தொடரும்'**

ஃப்ளாஷ் நியூஸ் வேகமாய் போய்க் கொண்டிருந்தது. விவேக்கும், விஷ்ணுவும் ஏர்போர்ட் ஆபீஸரை திகைப்பாய் பார்க்க, அவர் சொன்னார்.

''ஊட்டியில் ஒரு வாரகாலம் ஓய்வு எடுக்க கோவையிலிருந்து ஹெலிகாப்டரில் புறப்பட்டு இருக்கிறார் கவர்னர். அவரை வரவேற்பதற்காக ஊட்டி ஹெலிபேடில் காத்திருந்த அரசு அதிகாரிகள் ஒரு மணி நேரத்துக்கும் மேலாய் காத்திருந்து பார்த்துவிட்டு கவர்னரின் உதவியாளரோடு செல்ஃபோனில் தொடர்பு கொள்ள முயன்று இருக்கிறார்கள். முடியவில்லை...'' தேவ் சொல்லிக் கொண்டிருக்கும் போதே-

டி.வி. திரையில் அந்தப் பெண் தோன்றி, துயரம் தோய்ந்த முகத்தோடு செய்திகளை வாசிக்க ஆரம்பித்தாள்.



**'தமிழக ஆளுநர் தத்தாத்ரேயா இன்று காலை ஆறு மணியளவில் கோவையிலிருந்து ஊட்டிக்கு ஹெலிகாப்டரில் பயணமானார். அவரோடு உதவியாளர் ஒருவரும், அரசு அதிகாரிகள் நான்கு பேரும் சென்றார்கள். அரை மணி நேரத்திற்குள் ஊட்டி போய்ச் சேர வேண்டிய ஹெலிகாப்டர் திடீரென்று மாயமாகி விட்டதால் அரசு வட்டாரம் கவலை அடைந்துள்ளது. ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளாகி விட்டதா... அல்லது கடத்தப்பட்டதா என்று கண்டறிய விமானப் படையைச் சேர்ந்த ஹெலிகாப்டர்கள் ஈடுபட்டுள்ளன'**

செய்திகள் போய்க் கொண்டிருக்க, விவேக் ஏர்போர்ட் ஆபீஸரை ஏறிட்டான். ''மிஸ்டர் தேவ்...! நான் நான்கு நாட்களுக்கு முன்பே உளவுத் துறை அதிகாரிகள் கூட்டிய ரகசியக் கூட்டத்தில் ஒரு விஷயத்தைப் பற்றி குறிப்பிட்டேன். அதாவது எதிரிகளின் ஹிட் லிஸ்டில் இரண்டு பேர் இடம் பெற்றுள்ளார்கள். ஒருவர் ஹென்றி ஹைமன். இன்னொரு நபர் அரசியல் தலைவர்களில் மிகப் பெரிய வி.வி.ஐ.பி. அந்த அரசியல் தலைவர் தமிழக கவர்னர் தத்தாத்ரேயாவாக இருக்கலாம் என்று சொன்னேன். என்னுடைய கருத்தை யாருமே ஒப்புக் கொள்ளவில்லை. 'கவர்னர் பதவி என்பது ஒரு அலங்காரப் பதவி. அதிலும் தத்தாத்ரேயா வயதானவர். அவர் மேல் யார்க்கு என்ன கோபம் இருக்க முடியும்?' என்று எல்லோரும் சொல்லவே ஹிட்லிஸ்டில் இருந்து அவரை எடுத்து விட்டோம்...''

**'சற்று முன் வந்த செய்தி'** செய்தி வாசிக்கும் பெண்ணின் குரல் கேட்டு மூன்று பேர்களின் பார்வையும் டி.வி. திரைக்குப் போயிற்று.

**'தமிழக ஆளுநர் தத்தாத்ரேயா பயணம் செய்த ஹெலிகாப்டர் நீலகிரியின் அடர்ந்த காட்டுப்பகுதியான தொட்டகோம்பை என்ற இடத்தில் வலுக்கட்டாயமாக தரையிறக்கப்பட்டது தெரிய வந்துள்ளது. அதில் காயம்பட்ட நிலையில் ஒரு பைலட் மட்டும் மயக்கமாய்**

இருந்துள்ளார். அவர் பெயர் கிஷோர். பைலட் கிஷோர்க்கு மயக்கம் தெளிந்தபின்தான் கவர்னருக்கும் மற்றவர்களுக்கும் என்ன நேர்ந்தது என்று தெரியவரும். இச்சம்பவம் குறித்து தமிழக முதல் அமைச்சர் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார். இதுபோன்ற காட்டுமிராண்டித்தனங்கள் ஜனநாயகத்துக்கு விடப்பட்ட சவால் என்றும்...'

ஏர்போர்ட் ஆபீஸரின் மேஜை மேல் இருந்த டெலிஃபோன் குரைத்தது. ரிஸீவரை எடுத்தார் தேவ்.

''எஸ்...''

''அந்த ஹென்றி ஹைமனை பெங்களூர்க்கு அனுப்பி விட்டால் விட்டுடுவோமா...? அவன் இந்தியாவோட எந்த மூலையில் இருந்தாலும் சரி, அதே இடத்துல அவனுக்கு சமாதி கட்டுவோம்...'' குரல் கேட்டுத் திகைத்த தேவ் சைகை செய்ய, விவேக் பேரலல் ரிஸீவரை எடுத்துக் கொண்டான்.

''யா... யார்... நீ...?'' தேவ் கேட்டார்.

''பாண்டவர்கள்!''

''என்னது...! பாண்டவர்களா...?''

''ஆமாம்...! இந்த இருபத்தியோராவது நூற்றாண்டு துரியோதனன்களையும், துச்சாதனன்களையும், சகுனிகளையும் அழிப்பதற்காகவே அவதரித்த பாண்டவர்கள். டி.வி.யில் இப்பொழுது ஃப்ளாஷ் நியூஸில் வந்து கொண்டு இருக்கிற தமிழக ஆளுநர் தத்தாத்ரேயாவின் பெயர் நாளை இரங்கல் செய்தியில் வரும். தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கும். அரசு மூன்று நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கும். இந்தியாவில் உள்ள பல்வேறு கட்சித் தலைவர்கள் 'கவர்னர் தத்தாத்ரேயாவின் மரணம் நாட்டுக்கு பெரிய இழப்பு' என்று அறிக்கை விட்டு முதலைக் கண்ணீர் வடிப்பார்கள்...''

''நோ... டோன்ட் டூ லைக் தட்...! கவர்னர் எழுபது வயதானவர். அவர் என்ன தப்பு பண்ணினார்...?''



குரல் சிரித்தது. ''என்ன தப்பு பண்ணினாரா? அவர் பண்ணின ஜனநாயகப் படுகொலைகளைப் பட்டியல் போட ஆரம்பித்தால் இருபத்து நான்கு மணி நேரம் போதாது. இந்த தத்தாத்ரேயா கடந்த பத்து வருட காலமாய்த்தான் கவர்னர், அதற்கு முன்னால் ஒரு மாநிலத்தின் அமைச்சர். அதற்கு முன்னால் ஒரு எம்.எல்.ஏ. அதற்கும் முன்னால் மத்தியப் பிரதேசத்தில் இருந்த ஒரு ஜாதிக் கட்சிக்குத் தலைவர். அதற்கும் முன்னால் ஆக்ராவில் மண்டியா என்ற ஏரியாவில் ஒரு தாதா...''

தேவ் குறுக்கிட்டார். ''இதோ பார்! இந்தியாவில் இருக்கிற பெரும்பாலான அரசியல் தலைவர்களின் ஃப்ளாஷ்பேக் மோசமாகத்தான் இருக்கும். இந்தியா ஒரு ஜனநாயக நாடு. இந்த நாட்டில் மக்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்தான் தலைவராக முடியும். உனக்கு அவரைப் பிடிக்கவில்லையென்றாலும் அவரை நீ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். தத்தாத்ரேயாவின் இளமைக்காலம் வேறு மாதிரியாய் இருக்கலாம். இப்போது அவர் கவர்னர். வயதானவர். அவரைக் கடத்திப் போய் கொலை செய்வதால் என்ன லாபம்?''

குரல் சிரித்தது. ''மிஸ்டர் தேவ்! நீங்கள் ஒரு ஏர்போர்ட் ஆபீஸர். உங்களுடைய கடமை இந்த ஏர்போர்ட்டுக்குள்ளேயே முடிந்து விடும். அதேபோல் உங்களுக்கு முன்பாய் உட்கார்ந்து இருக்கிற க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸர் விவேக்கிற்கு போலீஸ் துறையோடு அவர்க்கும் கடமை முடிந்து விடும். ஆனால் எங்களைப் போன்றவர்களின் கடமை பெரியது! தத்தாத்ரேயா கடந்த பத்து வருடங்களில் நான்கு மாநிலங்களில் கவர்னராய் பொறுப்பு வகித்தார். அந்த மாநிலங்களில் அவர் கவர்னராய் இருந்தபோது அவர் செய்த ஜனநாயகப் படுகொலைகள் இந்திய சரித்திரத்தின் கறுப்பு பக்கங்கள். மத்திய அரசின் கைப்பாவையாக செயல்பட்டு ஒழுங்காக, நாணயமாக, நேர்மையாக ஆட்சி செய்துவந்த மூன்று மாநில அரசுகளைக்

கலைத்தார். அதற்காக கோடிக்கணக்கில் பணம் லஞ்சமாகப் பெற்றார். அதுமட்டும் இல்லை. அழகாக இருக்கும் பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இவருடைய படுக்கையறைக்கு வந்து ஆக வேண்டும். இல்லாவிட்டால் மனரீதியாக டார்ச்சர் கொடுப்பார். கோவாவில் இவர் கவர்னராக இருந்தபோது ஒரு பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரி தற்கொலை செய்து கொண்டது இவரால்தான். இப்போது சொல்லுங்கள்... இதுபோன்ற ஓநாய்களை உயிரோடு உலவ விடலாமா?''

தேவ், விவேக் மூச்சுக் காட்டாமல் கேட்டுக் கொண்டிருக்க- விஷ்ணு அந்த ஃபோன்காலை ட்ரேஸ் செய்யும் முயற்சியில் வேறு ஒரு டெலிஃபோனில் போலீஸ் கண்ட்ரோல் அறையோடு பேசிக் கொண்டிருந்தான்.

டெலிஃபோனில் குரல் தொடர்ந்தது. ''இப்போதைய எங்களுடைய இலக்கு இந்த இரண்டு பேர் மட்டும்தான். கவர்னர் இப்போது எங்கள் பிடியில். ஹென்றி ஹைமனும் எங்களிடமிருந்து தப்பிக்க முடியாது. அவர் 'மகாத்மா காந்தி விருது' வாங்குவதற்குள் மண்ணுக்குள் அனுப்பி வைக்க திட்டம் போட்டிருக்கிறோம். ஹென்றி ஹைமன் ஒரு விஞ்ஞானியாக இருக்கலாம். ஆனால் க்ளோனிங் முறைக்கு ஆதரவு கொடுப்பவர். இயற்கைக்கு எதிராக செயல்படும் அவர்க்கு 'மகாத்மா காந்தி விருது' கொடுப்பதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. விருது வாங்க வரவேண்டாம் என்று அவர்க்கு நாங்கள் கடிதம் போட்டோம். ஆனால் அவர் அந்தக் கடிதத்தை ப்ரஸ் மீட்டில் காட்டி கிழித்துப் போட்ட சம்பவம் எங்களையும் பாதித்து விட்டது. எனவே அவரையும் ஹிட் லிஸ்ட்டில் சேர்த்தோம். அவர் பெங்களூர்க்குப் போனாலும் சரி, இமயமலையின் அடிவாரத்துக்கே போனாலும் சரி, நாங்கள் விடமாட்டோம். கவர்னரையே கடத்திய எங்களுக்கு இந்த ஹென்றி ஹைமன் ஒரு கடுகு...''

ரிஸீவர் வைக்கப்பட்டு விட்டது.



ஒலியின் வேகம் விநாடிக்கு 332.5 மீட்டர். இந்த வேகத்தில் ஒலி செல்லும் போது அதற்கு இடையூறாய் எந்தப் பொருள் குறுக்கே நின்றாலும் ஒலி அதன் மேல் மோதி சிதறும். அப்படி சிதறும் ஒலியலைகள் ஒரே அதிர்வு எண்களைக் கொண்டதாக இருந்தால் அந்த ஒலி மறுபடியும் சில விநாடிகளுக்குப் பின் நமக்கே திரும்பி வரும். இதுதான் எதிரொலி.

## 14

ஹாஸ்பிடல்.

பைலட் கிஷோர் தலையிலும் கைகளிலும் பெரிய பாண்டேஜ்கள் தெரிய கட்டிலில் கண்மூடி படுத்து இருந்தார். சுற்றிலும் உயர் போலீஸ் அதிகாரிகள். விவேக், கிஷோருக்கும் பக்கத்தில் உட்கார்ந்து சின்னச் சின்ன கேள்விகளாய் கேட்டுக் கொண்டிருந்தான்,

''கிஷோர்! நடந்த சம்பவத்தைப் பற்றி உங்களால சொல்ல முடியுமா...?''

''எஸ்... ஸார்...''

''சம்பவம் எப்படி நடந்தது...? சொல்லுங்கள்...''

''ஸார்... ஹெலிகாப்டரை சரியாய் ஆறு மணிக்கு மேலே கிளப்பினோம். கவர்னரோடு சேர்த்து மொத்தம் ஆறு பேர் உள்ளே இருந்தோம். நானும் கோ-பைலட் ஈஸ்வரும் ஹெலிகாப்டரை இயக்கிக் கொண்டிருந்தோம். ஹெலிகாப்டர் குன்னூர்க்கு மேலே பறந்து கொண்டிருந்த போது கோ-பைலட் ஈஸ்வர் திடீரென்று என்னைத் தாக்கினான். அவன் கராத்தே கற்றவன். ஏதோ ஒரு ஸ்ட்ரோக்கை உபயோகித்து என் கழுத்துப் பகுதியில் ஒரு வெட்டு வெட்டினான். அடுத்த விநாடி என்னுடைய தலைக்குள் பிரளயம் நிகழ்ந்த உணர்வு. நான் மயக்கத்துக்கு போய்க் கொண்டிருந்தபோது ஈஸ்வர் தன்னிடமிருந்த துப்பாக்கியைக் காட்டி கவர்னரையும் மற்ற

அதிகாரிகளையும் மிரட்டிக் கொண்டிருந்தான்...''

கிஷோர்க்கு மூச்சு இரைத்தது. சில விநாடிகள் ஆசுவாசப்படுத்திக் கொண்டு மறுபடியும் பேச்சை ஆரம்பித்தான்.

''ஹெலிகாப்டர் பறந்து கொண்டிருக்கும் போதே எனக்கு மயக்கம் தெளிந்து விட்டது. ஆனால் அசைய முடியவில்லை. ஈஸ்வர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டிக் கொண்டே ஹெலிகாப்டரை ஒரு அடர்த்தியான காட்டுப் பகுதிக்குள் ஜாக்கிரதையாய் இறக்கினான். அவன் இறக்கிய இடத்துக்கு கொஞ்சம் தள்ளி ஒரு வேன் நின்றிருந்தது. ஹெலிகாப்டர் லேண்டானதுமே ஒரே மாதிரியான ட்ரஸ்ஸில் ஐந்து பேர் இயந்திரத் துப்பாக்கிகளோடு ஓடி வந்தார்கள். கவர்னரையும் மற்றவர்களையும் அழைத்துப் போனார்கள். நான் கடைசி முயற்சியாக ஈஸ்வரைத் தாக்கினேன். அவன் பதிலுக்கு ஒரு கல் எடுத்து என்னைக் கடுமையாய்த் தாக்க, நான் ரத்தம் கொட்டக் கொட்ட அப்படியே மயங்கி விழுந்து விட்டேன். நான் இறந்து விட்டதாக ஈஸ்வர் அந்த ஐந்து பேரிடமும் சொல்ல, 'உடலை அங்கேயே போட்டு விட்டு வா' என்று அவர்கள் சொன்னார்கள். ஈஸ்வர் ஓடிப்போய் வேனில் ஏறிக் கொண்டான்.''

விவேக் கேட்டான்.

''மொத்தம் ஐந்து பேர் இல்லையா?''

''ஆமாம்...''

''இளைஞர்களா...?''

''ஆமாம்...''

''வயது...?''

''இருபத்தைந்திலிருந்து முப்பதுக்குள் இருக்கலாம். ஒரே மாதிரியான ட்ரஸ்...''

''ட்ரஸ் எது மாதிரி இருந்தது என்று சொல்ல முடியுமா?''

''பார்ப்பதற்கு மன்னர் காலத்து ட்ரஸ் போல் இருந்தது. 'அர்ஜுனா' என்று ஒருவன் பெயர் சொல்லிக் கூப்பிட்டான்...''



விவேக் பெருமூச்சோடு நிமிர்ந்து போலீஸ் கமிஷனரைப் பார்த்தான். ''நவீன பாண்டவர்கள் ஸார்...''

''மனநோயாளிகளாய் இருப்பார்களோ...?''

''ஸார்...! துல்லியமாய் திட்டம் போட்டு ஹெலிகாப்டரோடு கவர்னரைக் கடத்தியிருக்காங்க. இது இன்டர்நேஷனல் க்ரைம்! மிஸ்டர் கிஷோர்...''

''ஸார்...''

''அந்த ஐந்து நபர்களின் முகங்களும் உங்க நினைவில் இருக்கா...?''

''இருக்கு ஸார். பட்...''

''என்ன, சொல்லுங்க...''

''அதே மன்னர் காலத்து உடையில் பார்த்தால்தான் அந்த முகங்கள் ஞாபகத்துக்கு வரும். பேண்ட் சர்ட்டில் வந்தால் நிச்சயம் முடியாது...''

''கோ-பைலட் ஈஸ்வரோடு உங்களுக்கு எத்தனை வருஷ காலப் பழக்கம்...?''

''மோர் தென்... ஃபைவ் இயர்ஸ் ஸார்...''

''அவரோட நடவடிக்கைகளில் சமீபகாலமாய் உங்களுக்கு எந்த சந்தேகமும் வரலையா...?''

''போன மாதம் லேசாய் ஒரு சந்தேகம் வந்தது ஸார். ஈஸ்வரை அடையாரில் இருக்கிற ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் பார்த்தேன். குடிச்சிருந்தான். 'என்ன ஈஸ்வர்! என்ன இது புதுப்பழக்கம்'ன்னு கேட்டேன். 'சும்மா ஃப்ரண்ட்ஸ்களோடு வந்து சாப்பிட்டேன்'னு சொன்னான். அதுக்கப்புறம் ஒருநாள் அவனுடைய சர்ட் பாக்கெட்டில் வெளிநாட்டு செல்ஃபோன் இருந்தது...''

''ஈஸ்வர்க்கு கல்யாணம்...?''

''இன்னும் இல்லை...''

''ஏதாவது காதல் விவகாரம்...?''

''இருக்கிற மாதிரி தெரியலை ஸார்...''

''பெண்கள் கிட்டே போற பழக்கம்...?''

''உண்டுன்னு நினைக்கிறேன்...''

''அப்படிப்பட்ட பெண்கள் யாரையாவது ஈஸ்வரோடு சேர்த்து எங்கேயாவது பார்த்தது உண்டா?''

''ஸார்! இந்த விஷயத்துல என்னைக் காட்டிலும் ஈஸ்வரைப் பற்றி தெளிவாய் சொல்லக் கூடிய ஃப்ரண்ட் ஒருத்தன் இருக்கான். அவன் பேரு ப்ரவீண். பெசண்ட் நகர்ல வீடு. தாம்பரம் ஏரோநாடிக்ஸ் காலேஜில் படிச்சிட்டிருக்கான். ஈஸ்வரும், ப்ரவீணும் பெஸ்ட் ஃப்ரண்ட்ஸ். அவன் கிட்டே நீங்க என்கொயர் பண்ணினால் யூ கேன் கெட் மோர் இன்பர்மேஷன்ஸ்...''

''ப்ரவீணோட அட்ரஸ்...?''

''பெசண்ட் நகர் கலாக்ஷேத்ரா காலனியில் ஃபிப்த் க்ராஸ் ரோடு. போன மாசத்துல ஒரு நாள் என்னோட கார்ல அந்த ப்ரவீணை அங்கே ட்ராப் பண்ணியிருக்கேன். தனியாத்தான் வீடு எடுத்து தங்கியிருக்கான்...'' கிஷோர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே விவேக்கின் செல்ஃபோன் வைப்ரேஷனில் அழைத்தது.

எடுத்து ''எஸ்'' என்றான்.

மறுமுனை சிரித்தது. ''பாண்டவர்கள்'' என்றது.

விவேக் கோபப்பட்டான். ''சொல்லு... உனக்கு என்ன வேணும்...? கவர்னரை விடுதலை பண்ணனும்ன்னா உன்னோட டிமாண்ட் என்ன...? பணம்ன்னா எவ்வளவு வேணும்...?''

''என்னது, பணமா...? நாங்க லட்சங்களைத் தேடி அலையும் ப்ளாக்மெயில் பிச்சைக்காரர்கள் இல்லை. இந்த நாட்டில் உள்ள துரியோதனன்களும், துச்சாதனன்களும் அழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே அவதரித்த நவீன பாண்டவர்கள்...''

''நாட்டில் உள்ள தப்புக்களை சரிசெய்ய தீவிரவாதம் சரியான வழியாகாது. கவர்னரின் உயிர்க்கு எந்த ஆபத்தையும் விளைவிக்க வேண்டாம். மத்திய அரசின் நிர்ப்பந்தத்துக்கு பணிந்து ஒரு வேளை அவர் மாநில ஆட்சிகளைக் கலைத்து இருக்கலாம். அதற்காக அவர்



தண்டிக்கப்படுவதில் என்ன நியாயம் இருக்கிறது...?''

''ஸாரி மிஸ்டர் விவேக்...! நீங்கள் ஒரு நேர்மையான க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸர் என்பது எங்களுக்குத் தெரியும். பிடிக்கவே முடியாது என்று நினைக்கப்பட்ட பல குற்றவாளிகளை நீங்கள் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வாங்கிக் கொடுத்து இருக்கிறீர்கள். ஆனால் உங்களால் ஊழல் அரசியல்வாதிகளையோ, கொலைக் குற்றங்களைச் செய்துவிட்டு அமைச்சர் பதவிகளில் உட்கார்ந்து இருப்பவர்களையோ அல்லது முதல் அமைச்சர், கவர்னர் போன்ற உயர் பதவிகளில் இருப்பவர்களையோ ஒன்றும் செய்ய முடியாது. அவர்களை கைது செய்ய வேண்டுமென்றால் ஏராளமான ஃபார்மாலிடீஸ். அந்த ஃபார்மாலிடீஸ் எல்லாவற்றையும் கடைப்பிடித்து அவர்களை நெருங்குவதற்குள் அவர்களுக்கு வயதாகியிருக்கும் அல்லது இறந்து போயிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களைத் தண்டிக்கத்தான் நாங்கள் பாண்டவர்களாக உருமாறியுள்ளோம். உயர் பதவிகளில் இருப்பவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருந்தால்தான் அவர்களுக்கு கீழே இருப்பவர்கள் அதே ஒழுக்கத்தோடு இருப்பார்கள். மன்னன் எவ்வழி... மக்கள் அவ்வழி என்று பெரியவர்கள் சும்மாவா சொல்லிவிட்டு போயிருக்கிறார்கள்...? கவர்னர் தத்தாத்ரேயா ஒரு முழுநேர கிரிமினல். பணத்துக்காக ஜனநாயகத்தையே படுகொலை செய்யத் துணிந்தவர். அவரைத் தண்டிக்க நாங்கள் தீர்மானித்து விட்டோம். இன்று இரவு எட்டரை மணிக்கு அவர் கொல்லப்படுகிறார். நாளைக்கு காலை பத்து மணிக்கு அவருடைய உடலுக்கு நீங்கள் அரசு மரியாதை செலுத்தலாம்...''

''இதோ... பார்...''

''ஸாரி விவேக்... உங்களுக்கு வேறு வேலை ஏதாவது இருந்தால் பார்க்கலாம்...''

இணைப்பு அறுந்து போயிற்று.




விபத்திலோ அல்லது நோயினாலோ உறுப்புகள் பாதிக்கப்பட்டால் தங்கள் உறுப்புகளை சீர்படுத்திக் கொள்ள உதவுவதுதான் ஸ்டெம் செல். கண்ணில் உள்ள செல்களும், காலில் உள்ள செல்களும் வெவ்வேறு விதமானவை. உடலின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான செல்கள் உள்ளன. ஒவ்வொன்றின் பணிகளும் வேறு. உடலில் உள்ள ஒரு செல்லில் இருந்துதான் எந்த ஒரு செல்லையும் உருவாக்க முடியுமென்றால் அது ஸ்டெம் செல் தான். இந்த ஸ்டெம் செல் உடம்பின் மற்ற இடங்களைக் காட்டிலும் தொப்புள் கொடியில்தான் அதிகம் காணப்படுகிறது. எதிர்காலத்தில் இளமையை மீட்கக் கூட இந்த ஸ்டெம் செல்கள் பயன்படும்.

ஹாஸ்பிடலை விட்டு வெளியே வந்தார்கள் விவேக்கும், விஷ்ணுவும். பார்க்கிங்கில் நிறுத்தியிருந்த காரை நெருங்கியபோது விஷ்ணு கூப்பிட்டான்.

''பாஸ்...''

''என்ன...?''

''இப்ப எங்கே போறோம்...?''

''பெசண்ட் நகரில் இருக்கிற அந்த ப்ரவீணைப் பார்க்க...! இப்போதைக்கு அவன் ஒருத்தன்தான் துருப்புச் சீட்டு...''

''பாஸ்...! கவர்னரைக் காப்பாத்த முடியும்ன்னு எனக்குத் தோணலை... ராத்திரி எட்டரை மணிக்கு நவீன பாண்டவர்கள் அவ்ரை 'வதம்' பண்ணிடுவாங்கன்னு நினைக்கிறேன். நாளைக்குக் காலையில் அரைக் கம்பத்தில் தேசியக் கொடி பறக்கப் போறது உறுதி பாஸ்...''

''டேய்... புலம்பாமே வாடா...''

''கவர்னரைக் காப்பாத்த முடியுமா பாஸ்...?''



''ப்ரவீண் கிட்டேயிருந்து ஈஸ்வர் பற்றின விஷயங்கள் நிறைய வாங்க வேண்டியிருக்கு... அதுல ஏதாவது 'க்ளூ' கிடைச்சாத்தான் நாம கவர்னர் இருக்கிற திசை நோக்கி மூவ் பண்ண முடியும்...''

''பாஸ்... பப்ளிக் டாக் எப்படியிருக்கு தெரியுமா?''

''எப்படி...?''

''நவீன பாண்டவர்களின் அதிரடி நடவடிக்கைக்கு ஏகப்பட்ட வரவேற்பு. கவர்னர் தத்தாத்ரேயாவைப் பற்றி யாருமே கவலைப்படலை. வண்ணாரப் பேட்டையில் நவீன பாண்டவர்களுக்கு ஒரு நற்பணி மன்றமே திறந்துட்டாங்கன்னா பார்த்துக்கோங்களேன்...''

கார்க்குள் ஏறப்போன விவேக் பக்கவாட்டில், ''எக்ஸ்க்யூஸ் மீ ஸார்'' என்று ஒலித்த குரல் கேட்டுத் திரும்பினான்.

இன்ஸ்பெக்டர் சிற்றரசு கையில் ஒரு ஃபைலோடு நின்றிருந்தார்.

''ஓ...! சிற்றரசு... வாங்க... எங்கே இந்தப் பக்கம்...?''

''ஸார்... அந்த கருகின கால் விஷயமா போஸ்ட்மார்ட்டம் பண்ணின டாக்டர் கிட்டே ஒரு சந்தேகம் கேட்க வந்தேன்...''

''ஸாரி... சிற்றரசு...! அந்தக் கேஸ்ல என்னால கவனம் செலுத்த முடியாத அளவுக்கு இந்த கவர்னர் ப்ராப்ளம்...''

''எனக்குத் தெரியும் ஸார்... அதனால்தான் உங்களை தொல்லைப்படுத்தலை. நான் கேஸை டீல் பண்ணிட்டிருக்கேன் ஸார். சீக்கிரமே விடை கிடைக்கும்...''

சிற்றரசு விடைபெற்றுக் கொண்டு போய்விட, விஷ்ணு, ''பாஸ்'' என்றான்.

''என்ன... சொல்லு...''

''என்னோட மனசுக்குள்ளே ஒரு சந்தேகப் பட்சி கீச் கீச்ன்னு கத்துது...''

''சந்தேகமா...?''

''ம்... இந்த கருகின காலுக்கும், கவர்னர் கடத்தப்பட்டதுக்கும் இடையில் ஏதோ ஒரு சம்பந்தம்

நூலிழை மாதிரி ஒட்டிக்கிட்டு இருக்கிற மாதிரி எனக்கொரு சந்தேகம்...''

''சந்தேகம் வரக் காரணம்...?''

''நீங்கதான்...!''

''என்னது! நானா...?''

''ஆமா பாஸ்... உங்ககூட நான் எத்தனை வருஷமா சுத்திகிட்டு இருக்கேன். உங்களைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும். ஏதாவது ஒரு கேஸை எடுத்து நீங்க ஹேண்டில் பண்ண ஆரம்பிச்சா அதை பாதியில் விட மாட்டீங்க. குற்றவாளியைக் கண்டுபிடிச்சு உரிய போலீஸ் ஸ்டேஷன்ல ஒப்படைக்கற வரைக்கும் உங்க பணி நிற்காது. ஆனா இந்த கருகின கால் விஷயத்துல மட்டும் ஆரம்பத்துல சுறுசுறுப்பு காட்டினீங்க. கரும்புக் காட்டுக்கெல்லாம் போய் 'சீன் ஆஃப் க்ரைம்' பார்த்தீங்க. அதுக்கப்புறம் அந்தக் கேஸைத் தூக்கி குப்பைக் கூடையில் போட்டுட்டு கவர்னர் கடத்தப்பட்ட கேஸுக்கு வந்துட்டீங்க... ஸோ... நான் என்ன நினைக்கறேன்னா...?''

''என்ன நினைக்கிறே?''

''கருகின கால் கேஸ் விஷயத்துல நீங்க குற்றவாளியைக் கண்டுபிடிச்சுட்டீங்கன்னு நினைக்கிறேன்.''

விவேக் புன்னகைத்தான். விஷ்ணு கேட்டான்.

''இந்தச் சிரிப்புக்கு என்ன அர்த்தம் பாஸ்?''

''நீ நினைக்கிறது சரின்னு அர்த்தம்...''

''பா... பாஸ்...! குற்றவாளி... யார்...?''

''அவன் பேர் தினேஷ்...''

''கருகின கால் யாரோடது...?''

''அது கஜபதி...''

''யார் பாஸ் இவங்க...?''

''சொல்றேன். மொதல்ல ப்ரவீணைப் போய்ப் பார்க்கணும்... அவன் சொல்லப் போகிற விஷயங்கள்தான் இந்தக் கேஸுக்கு வைட்டமின் மாத்திரைகள்'' விவேக் சொல்லிக் கொண்டே காரை நகர்த்தி வேகமாய் விரட்டினான்.



கார் பெசண்ட் நகரை நோக்கி விரைந்தது.




மனிதன் அழும்போது வெளிப்படும் கண்ணீர் பார்ப்பதற்கு தண்ணீர் போல் இருந்தாலும் அதில் நிறைய ரசாயன விஷயங்கள் உள்ளன. ஒரு சொட்டுக் கண்ணீரில் புரோட்டீன், குளோரைடு, குளுகோஸ், சோடியம், பொட்டாஸியம் என்று ஏகப்பட்டது உள்ளது. இதுதவிர லிஸாசிமின் என்ற ஒரு ரசாயனப் பொருளும் அதில் இருக்கிறது. இந்த லிஸாஸிமின் வேலை என்ன தெரியுமா? கண்ணுக்குள் நுழைகிற தொற்றுநோய்க் கிருமிகளை உடனுக்குடன் அழிப்பதுதான். கண்ணீரில் ஒரு கிருமி நாசினி.

பெசண்ட் நகர். கலாசேத்ரா காலனி. ஃபிப்த் க்ராஸ்.

விவேக், ப்ரவீணின் வீட்டைக் கண்டுபிடித்து வாசலில் காரை நிறுத்தினான். காம்பெளண்ட் கேட் அருகே ஒரு கோல்டு மொஹர் மரம் புஷ்டியாய் வளர்ந்து ரோடு முழுக்க பூக்களை உதிர்த்து வைத்து இருந்தது.

''இந்த வீடு தானா பாஸ்...?''

''இதேதான்...''

காம்பெளண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள். சாத்தியிருந்த வாசல் கதவுக்கு முன்பாய் நின்று அழைப்பு மணிக்கு வேலை கொடுக்க, சில விநாடிகளில் கதவு திறந்தது. தோளில் துண்டு போட்டுக் கொண்டு லுங்கி, பனியனில் ஒரு நபர் நின்றிருந்தான்.

''யார் வேணும்...?''

''ப்ரவீண்...''

''அவர்... அவர்... வெளியே போயிருக்கார்.''

''வெளியேன்னா... எங்கே...?''

''நீ... நீங்க... யாரு...?''

விஷ்ணு அவனுடைய தோளில் கை வைத்தான். ''நாங்க யார்ன்னு சொன்னாத்தான் பதில் சொல்லுவியா...? சொல்றோம்... போலீஸ்! ப்ரவீண் எங்கே சொல்லு...''

''நீங்க... நீங்க... போலீஸா...?''

''ஏன் கழுத்துல போர்டு மாட்டிக்கிட்டு வந்தாத்தான் போலீஸ்ன்னு நம்புவியா...?''

''மன்னிச்சுடுங்க ஸார்... ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்னாடிதான் ப்ரவீண் அய்யாவை ரெண்டு போலீஸ் அதிகாரிகள் வந்து ஜீப்ல கூட்டிட்டுப் போனாங்க...''

விவேக், விஷ்ணு முகம் மாறினார்கள்.

''என்னது...! போலீஸ் அதிகாரிகள் ரெண்டு பேர் வந்து ப்ரவீணை கூட்டிக்கிட்டு போனாங்களா...?''

''ஆமா... ஸார்!''

''எதுக்கு...?''

''ஏதோ விசாரணையாம்...''

''யூனிஃபார்ம்ல வந்தாங்களா...?''

''ஆமா ஸார்... தூங்கிட்டிருந்த அய்யாவை எழுப்பி, ரெண்டே நிமிஷத்துல ஜீப்புக்கு கூட்டிக்கிட்டு போயிட்டாங்க...''

விவேக் உடனே தன் செல்ஃபோனை எடுத்து கமிஷனரை தொடர்பு கொண்டான்.

''ஸார்... நான் விவேக்! ப்ரவீண் வீட்டிலிருந்து பேசிட்டிருக்கேன்...''

''என்ன... ப்ரவீண் கிட்டே என்கொயர் பண்ணினீங்களா... மிஸ்டர் விவேக்...?''

''ஸார்... நான் இங்கே வர்றதுக்கு முந்தியே ரெண்டு போலீஸ் அதிகாரிகள் வந்து விசாரணைக்காகன்னு சொல்லி ப்ரவீணை ஜீப்ல கூட்டிகிட்டுப் போயிருக்காங்க...''

''மை குட்னஸ்...! யார் அந்த ரெண்டு பேர்...? ப்ரவீணை விசாரிக்கச் சொல்லி நான் எந்த ஒரு போலீஸ் அதிகாரிக்கும் இன்ஸ்ட்ரக்ஷன் தரலையே?''

''ஸார்... ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட் த சிச்சுவேஷன். ப்ரவீண் யாராலோ கடத்தப்பட்டு இருக்கார்...''



''எப்படி மிஸ்டர் விவேக்...? ஹெலிகாப்டர் பைலட் கிஷோர் ஹாஸ்பிடலில் நம்மிடையே பேசும்போதுதான் ஈஸ்வரின் நண்பன் ப்ரவீணைப் பற்றிச் சொன்னார். 'ஈஸ்வரைப் பற்றிய எல்லா விஷயங்களும் ப்ரவீனுக்குத்தான் தெரியும்'ன்னு அவர் சொன்னது எதிரிகளின் காதுகளுக்கு எப்படிப் போயிருக்கும்...?''

''ஸார்...! ஹாஸ்பிடலில் கிஷோர், ப்ரவீணைப் பத்தி நம்மகிட்டே பேசும்போது ஹாஸ்பிடலின் ஊழியர்களும், பிரஸ் மீடியாவைச் சேர்ந்தவங்களும் இருந்தாங்க. எதிரியின் ஆளும் அதில் கலந்து இருக்கலாம். விஷயம் உடனே எதிரிகளுக்குப் போய்விட்டது. அவர்கள் மின்னல் வேகத்தில் செயல்பட்டு போலீஸ் யூனிஃபார்மை மாட்டிக் கொண்டு வந்து ரெண்டே நிமிஷத்தில் 'விசாரணைக்காக' என்று சொல்லி தடாலடியாய் கூட்டிக் கொண்டு போய் விட்டார்கள்...''

''எப்படியோ ஏமாந்து விட்டோம். என்ன செய்யலாம் விவேக்...?''

''ஒரு வழி இருக்கிறது ஸார்...''

''என்ன...?''

''நேரில் வந்து சொல்லட்டுமா ஸார்...?''

''ப்ளீஸ்... அ'யாம் வெயிட்டிங்...''

> எந்த ஒரு அமிலத்தைக் குடித்தாலும் உடனடியாய் மரணம் கிடையாது. அமிலம் சாப்பிட்ட 12 மணி நேரம் கழித்துத்தான் மரணத்துக்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். ஆனால் அமிலங்களில் மோசமான வில்லன் ஆக்ஸாலிக் அமிலம். (OXALIC ACID) இதைக் குடித்த ஒரு நபர் ஒரு மணி நேரத்துக்குள் இறந்து விடுவார்.
>
> 17

காரில் கமிஷனர் ஆபீஸை நோக்கிப் போய்க் கொண்டிருந்த போது விஷ்ணு கேட்டான்.

''அது என்ன வழி பாஸ்...?''

விவேக் ஒரு புன்னகையோடு சொன்னான்.

''அமீர் கிட்டே மறுபடியும் ஒரு தடவை விசாரணை பண்ண வேண்டியது தான்...''

விஷ்ணு திகைத்தான். ''அது யார் பாஸ் அமீர்?''

''தினேஷோட ஃப்ரண்ட். ஹைவேஸ் ரோட்ல ஆட்டோமொபைல்ஸ் ஒர்க்ஷாப் வெச்சிருக்கான்...''

''தலை சுத்துது பாஸ்! அவனுக்கும் இந்தக் கேஸுக்கும் என்ன சம்பந்தம்?''

''எக்கச்சக்க சம்பந்தம்...! விஷ்ணு! இந்தக் கேஸில் சில விஷயங்களை மறைமுகமாய் செய்ய வேண்டியிருந்தது. அதனால உனக்கு எதுவும் தெரியப்படுத்த முடியலை. கருகின கால் விஷயமாய் என்கொயரி பண்ண நாம் செம்பாக்கம் கரும்புக் காட்டுக்குப் போனோம். அங்கே எந்தவிதமான தடயமும் கிடைக்கலை. பட், அங்கே இருந்த கரும்புத் தோட்ட உரிமையாளர்களை நான் தனித்தனியா சந்திச்சு விசாரணை நடத்தியபோது அதுல ஒருத்தர் மட்டும் அடிக்கடி தன்னோட மனைவியைப் பார்த்துக்கிட்டும், வேர்த்து வழிஞ்சுக்கிட்டும் பதில் சொன்னார். அந்த சமயத்துல அவரை விட்டுட்டு அன்னிக்கு ராத்திரியே தனியா வந்து அவரைச் சந்திச்சேன். அவரோட பேர் வரதராஜன். அவரை நான் அரட்டி மிரட்டி விசாரிச்சதும் அவர் சில உண்மைகளைச் சொன்னார்.''

விஷ்ணு நிமிர்ந்து உட்கார்ந்தான். விவேக் தொடர்ந்தான்.

''அன்னிக்கு ராத்திரி கரும்புத் தோட்டம் சாலையில் அவர் காவலுக்காக படுத்து இருந்தபோது திடீர்னு தோட்டத்தோட ஒரு பகுதியில் நெருப்பு தெரிஞ்சிருக்கு. ஓடிப்போய் பார்த்து இருக்கார். ஒரு உடல் பெட்ரோல் வாசத்தோடு தீப்பிடிச்சு எரிஞ்சுட்டிருந்ததையும், ரோட்டு ஓரத்தில் நின்றிருந்த மாருதி ஆம்னி வேன் ஒண்ணு வேகமா புறப்பட்டுப் போனதையும் பார்த்து இருக்கார். வேனின் ரெஜிஸ்ட்ரேஷன் நம்பர் 2222. மனசில் உடனே



சுலபமாய் பதிந்து விட்டது. வரதராஜும் அவருடைய மனைவியும் சேர்ந்து தீப்பற்றி எரிகிற உடலை நீர் ஊற்றி அணைப்பதற்குள் உடல் எரிந்து கரிக்கட்டையாகி விட்டது. வரதராஜ் விஷயத்தை போலீஸுக்கு கொண்டு போகலாம் என்று சொல்ல, அவரோட மனைவி மறுத்து இருக்கார். காரணம் அந்த நிலத்தை வேற ஒருத்தர்க்கு விற்கிறதுக்காக அக்ரிமெண்ட் போட்டு அட்வான்ஸாக ரெண்டு லட்ச ரூபாயையும் வாங்கி மகளுக்கு கல்யாணத்தையும் முடித்து விட்டிருந்தார்கள். நிலத்தை பதினைந்து நாளில் கிரயம் செய்து கொள்ளப் போறதாய் பேச்சு. இந்த சூழ்நிலையில் நிலத்தில் ஒரு உடல் எரிக்கப்பட்டதும், விஷயம் போலீஸுக்குப் போவதும் சரியில்லை என்று நினைத்து- எரித்த உடலை ஒரு மாட்டு வண்டியில் போட்டுக் கொண்டு போய், ஜனநடமாட்டம் இல்லாத ஒரு பள்ளத்தில் போட்டு விட்டார்கள்...''

''அந்த உடலோட கால் பகுதியைத் தான் ஒரு நாய் கவ்விட்டு வந்து ஐஸ்க்ரீம் பார்லர்க்குப் பின்னாடி போட்டிருக்கு...?''

''ஆமா...! வரதராஜ் சொன்ன ஆம்னி மாருதி வேனின் ரெஜிஸ்ட்ரேஷன் நம்பரை வைச்சு ட்ரேஸ் அவுட் பண்ணியதில் அந்த வண்டி சர்வீஸுக்காக அமீர் ஆட்டோமொபைல்ஸில் விடப்பட்ட விபரம் தெரிஞ்சுது. எனக்கு இது போதாதா என்ன...? மறுநாள் ராத்திரி பத்து மணிக்கு மேல் தடாலடியாய் அமீரின் ஒர்க்ஷாப்புக்குள் நுழைஞ்சேன். விசாரணையில் நேற்றைக்கு ராத்திரி மாருதி வேனை எடுத்துட்டுப் போனது தினேஷ் என்கிற விபரம் தெரிஞ்சுது. அந்த ராத்திரியே தினேஷை மடக்கி அமீரையும் சேர்த்து கமிஷனர் ஆபீஸுக்கு கொண்டு வந்து ரகசிய செல்களில் அடைச்சோம். விசாரணை பண்ணினோம். கஜபதியைக் கொலை செய்ததை தினேஷ் ஒத்துக்கிட்டான். இருந்தாலும் கொலைக்கு வேறு ஏதாவது பிரச்னை இருக்குமோன்னு நினைச்சு அமீரோட ஒர்க்ஷாப்பையும், தினேஷோட வீட்டையும் சோதனை போட்டோம்.

திணேஷ் வீட்டில் எதுவும் கிடைக்கலை. ஆனா அமீரோட ஒர்க்ஷாப்பில் ஒரு வில்லங்கமான விபரம் பிடிபட்டது...''

''வில்லங்கமான விபரமா...?''

''எஸ்...! அமீரின் ஒர்க்ஷாப்புக்குள்ளேயே பூமிக்கு கீழே ஒரு ரகசிய அறையும், அதுக்குள்ளே வயர்லெஸ்ஸும் இருந்தது. அமீர் கிட்டே அதைப் பத்தி கேட்டபோது சரியான பதில் சொல்லலை. ரெட் ட்ரீட்மெண்ட் கொடுத்ததுக்கப்புறம் ஒரு தீவிரவாத கும்பலோடு தொடர்பு இருக்கிறதை ஒத்துக்கிட்டான். பட், அந்தக் கும்பலைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாதுன்னும் அதுல சிலர் வடநாட்டுப் பக்கம் போயிட்டதாகவும் சிலர் மட்டும் இங்கே இருக்கிறதாகவும் சொன்னான்...''

''என்ன பாஸ்... இது...? கிணறு வெட்ட பூதமே கிளம்பியிருக்கு...''

''பூதம் தான்...!''

''கவர்னர் தத்தாத்ரேயா கடத்தப்பட்டதுக்கும், ஹென்றி ஹைமன் ஹிட் லிஸ்ட்டில் உள்ளதுக்கும் காரணம்... அமீர் சேர்ந்துள்ள தீவிரவாதக் கும்பல்தான். இல்லையா, பாஸ்...?''

''ஆமா...!''

''அந்த தவின பாண்டவர்கள்தான் இவங்களா...?''

''இல்லைன்னு சொல்றான் அமீர்... அவன் சார்ந்து இருக்கிற தீவிரவாதக் கும்பலுக்கு ஹிந்தி, மராட்டி மட்டும்தான் தெரியுமாம். தமிழ் தெரியாதாம்...''

''அப்படீன்னா... இதுல ரெண்டு தீவிரவாத கும்பல்கள் சம்பந்தப்பட்டிருக்கா...?''

''அப்படித்தான் தெரியுது...!''

''குழப்பமாய் இருக்கே பாஸ்...! இந்தக் குழப்பம் தெளியறதுக்குள்ளே ஆளுநர் தத்தாத்ரேயா அமரர் ஆயிடுவார் போலிருக்கே?''

கார் போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் சீறிப் பாய்ந்து பார்க்கிங்கில் போய் நின்றது.



ஐ.நா. சபை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது தெரியுமா? 1945-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் தேதி தொடங்கப்பட்டது. உலக சமாதானம், பாதுகாப்பு, ஆயுதத் தடை, அரசியல் மற்றும் பொருளாதார சமூக நிலையில் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்காக உலக நாடுகள் தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட அமைப்பே ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) சபை. ஐ.நா. சபையின் நிர்வாக மொழிகள் மொத்தம் 5. (சீன மொழி, ஆங்கிலம், அரபி, ருஷ்ய மொழி, பிரெஞ்ச்) ஐ.நா. சபையின் சின்னம் நீலநிறத்தின் நடுவே வெள்ளை வட்டம்.

## 18

போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் இருந்த ரகசிய செல்லுக்குள் விவேக், விஷ்ணு, கமிஷனர் மூன்று பேரும் நுழைந்தார்கள்.

சிமெண்ட் திட்டுகளின் மேல் மல்லாந்து படுத்து இருந்த திணேஷும், அமீரும் எழுந்து உட்கார்ந்தார்கள். பின் கைகளை கட்டிக் கொண்டு நின்றார்கள்.

விவேக், அமீரின் தோள் மேல் கையை வைத்தான்.

''அமீர்...! நீ முழுசா உண்மைகளைச் சொல்லலை. ஒர்க்ஷாப் என்கிற போர்வையில் ஒரு உளவு ஸ்தாபனத்தையே நடத்தியிருக்கே. உன்னோட ஒர்க்ஷாப்பை துருவித் துருவிப் பார்த்ததில் ரகசிய செய்திகள் அடங்கிய சி.டி.க்கள் கிடைச்சிருக்கு. காஷ்மீர் பிரச்னையில் ஆளுநர் தத்தாத்ரேயா பாகிஸ்தானுக்கு எதிராக சில கடுமையான கருத்துக்களை சொன்னார் என்கிற ஒரே ஒரு காரணத்துக்காக அவரையும், தீவிரவாத இயக்கங்களை வேரோடு அழிக்க வேண்டும் என்ற உறுதியோடு உலகம் முழுக்க சுற்றி வரும் விஞ்ஞானி ஹென்றி ஹைமனையும் ஹிட் லிஸ்ட்டில் சேர்த்து இருக்கிறது உன்னுடைய இயக்கம். இப்போ ஆளுநர் உன்னோட இயக்கத்தால் கடத்தப்பட்டு மரண

விநாடிகளை எண்ணிக் கொண்டிருக்கிறார். உன்னுடைய இயக்கத்தைப் பற்றிய உண்மையான தகவல்களைச் சொன்னால்தான் ஆளுநரைக் காப்பாற்ற முடியும்...''

அமீர் சிரித்துக் கொண்டே இரண்டு கைகளையும் விரித்தான்.

''ஸாரி ஸார்...! இப்போது நான் மாட்டிக் கொண்டாலும் கவர்னர் தத்தாத்ரேயாவை கடத்தவும், கொலை செய்யவும் திட்டம் போட்டுக் கொடுத்தது நான்தான். என்னுடைய லட்சியமே தத்தாத்ரேயாவை சாய்ப்பது தான். அதில் எனக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. இந்த வெற்றியே எனக்குப் போதுமானது. இனி உங்கள் போலீஸும் கோர்ட்டும் எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் சரியே...''

''இதோபார் அமீர்...! நீ எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்தால் உனக்கு பொது மன்னிப்பு கிடைக்கும். இந்திய அரசாங்கம் உனக்கு ஒரு நல்ல வேலையையும், வீட்டையும் கொடுக்கும். இந்தியாவின் எந்த நகரத்திலும் நீ ஒரு சந்தோஷமான வாழ்க்கையை நடத்தலாம்...''

''நான் இங்கே அப்படி ஒரு வாழ்க்கையை வாழ்வதைக் காட்டிலும் பாகிஸ்தானில் போய் பிச்சை எடுத்து பிழைத்துக் கொள்வேன்...''

''அமீர்! நன்றாக யோசனை பண்ணு! இது நாங்கள் உனக்கு கொடுக்கிற கடைசி வாய்ப்பு. இதை நீ உபயோகப்படுத்திகிட்டு உன்னோட இயக்கத்தை காட்டிக் குடு... பொது மன்னிப்பு, வீடு, வேலை... யோசனை பண்ணு...''

''நீங்கள் சொன்ன மூணும் என் தலையில் இருந்து உதிர்கிற ரோமத்துக்குச் சமம்...''

''இதுதான் உன் பதிலா...?''

''ஆமாம்...''

''ஆளுநரைக் காப்பாற்ற முடியாது என்கிற எண்ணத்தில் நீ பேசிக்கிட்டு இருக்கே... ஒருவேளை அவரை நாங்க காப்பாத்திட்டா...?''





''என்னது...! ஆளுநரை காப்பாற்றப் போகிறீர்களா? எங்களது இயக்கம் எந்தத் திசையில் இயங்கிக் கொண்டு இருக்கிறது என்று கூட உங்களுக்குத் தெரியாது. எங்கே போய் எப்படி காப்பாற்றப் போகிறீர்கள்?''

விவேக் புன்னகைத்து தன் செல்ஃபோனை எடுத்தான்.

''ஒரு நிமிஷம் அமீர்...'' என்று சொன்னவன், தன் செல்ஃபோனை எடுத்து எண்களைத் தட்டிவிட்டு பேசினான்.

''ப்ரவீண்...! இப்போ நீங்க எங்கே இருக்கீங்க?''

''கமிஷனர் ஆபீஸுக்கு எதிரில் இருக்கிற காண்டீனில் போண்டா சாப்பிட்டு முடிச்சு டீ சாப்பிட்டுக்கிட்டு இருக்கேன் ஸார்...''

''நீங்க உடனே கமிஷனர் ஆபீஸுக்குள்ளே இருக்கிற செல்லுக்கு வாங்க...''

ப்ரவீண் செல்லுக்குள் நுழைய, கமிஷனரும் விஷ்ணுவும் தத்தம் முகங்களில் சந்தோஷத் திகைப்பை காட்டினார்கள்.

விவேக், கமிஷனரை ஏறிட்டான்.

''ஸாரி ஸார்... டெல்லியில் உள்ள உளவுத் துறையும் நானும் சேர்ந்து சில பொய்யான காட்சிகளை மேடையேற்ற வேண்டியிருந்தது. நம்மிடம் பிடிபட்ட தீவிரவாதி அமீர் உயிரை வேண்டுமானால் விடுவானே தவிர தன்னுடைய இயக்கத்தை காட்டிக் கொடுக்க மாட்டான் என்பது இரண்டு நாட்களுக்கு முன்பே எனக்குத் தெரிந்து விட்டது. அதற்குப் பிறகு தான் டெல்லி சி.பி.ஐ. ப்ளஸ் உளவுத் துறை ப்ளஸ் நானும் இணைந்து ஆளுநர் தத்தாத்ரேயாவோடு பேசி ஒரு திட்டம் தயாரித்தோம். ஆளுநர் கோவையிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் ஊட்டிக்குச் செல்லும்போது ஊட்டிக்குப் போகாமல் கூடலூரில் உள்ள ரகசிய பங்களாவுக்கு போய் பாதுகாப்போடு தங்கிக் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் கவர்னர் கடத்தப்பட்டு விட்டதாக நாங்கள் பொதுமக்கள் மத்தியில் ஒரு சீனை

அரங்கேற்றுவோம். டி.வி. மீடியாக்கள் மூலம் செய்தி வேகமாய்ப் பரவும். ஹெலிகாப்டர் பைலட் கிஷோர் படுகாய ஒப்பனையோடு பொய்யாய் ஒரு பேட்டி கொடுப்பார். அந்தப் பேட்டியில் கோ-பைலட் ஈஸ்வர் தான் 'நவீன பாண்டவர்கள்' என்ற தீவிரவாதிகளுக்கு ஆளுநர் கடத்தப்பட உதவி புரிந்ததாக கூறுவார். ஈஸ்வரின் நண்பன் ப்ரவீணுக்கு எல்லாம் தெரியும் என்பதுபோல் பிரச்னையை ஹைலைட் செய்தோம். இது உண்மையிலேயே ஆளுநரைக் கடத்துவதற்காக திட்டம் போட்டிருந்த அமீரின் கூட்டாளிகளான உண்மையான தீவிரவாதிகளுக்கு திகைப்பாகவும் பயங்கர அதிர்ச்சியாகவும் இருக்கும். ஆளுநரைக் கொல்வது உண்மையான தீவிரவாதிகளின் லட்சியமாக இருப்பதால் ப்ரவீணை அவர்கள் கடத்திக் கொண்டு போய் வைத்து பைலட் ஈஸ்வர் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்வார்கள் என்று நம்பினோம். எங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. அமீரின் தீவிரவாதக் கும்பலைச் சேர்ந்த இரண்டு பேர் போலீஸ் அதிகாரிகள் போல் வந்து ப்ரவீணை கடத்திப் போனார்கள். அவர்கள் போன ஜீப்பை சி.பி.ஐ. ஸ்க்வாட் ஒன்று மூச்சுக் காட்டாமல் பின்தொடர்ந்தது. அவர்களுடைய இருப்பிடம் போய்ச் சேர்ந்ததும் ஒட்டுமொத்தமாய் அவர்களை அமுக்கியது. அவர்கள் அனைவருமே இப்போது சி.பி.சி.ஐ.டி. போலீஸ் வளாக அறை செல்களில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். அமீர் தன் வாயைத் திறந்து எல்லா உண்மைகளையும் சொன்னால் அவனை அப்ரூவர் ஆக்கி விடலாம் என்ற எண்ணத்தில் தான் பொது மன்னிப்பு, வேலை, வீடு என்று ஆசைகாட்டிப் பார்த்தேன். அமீர் வழிக்கு வரமாட்டான் என்று தெரிந்த பின்தான் ப்ரவீணுக்கு ஃபோன் செய்ய வேண்டியதாயிற்று...''

கமிஷனர் பரவசமாய் பாய்ந்து விவேக்கை கட்டிப் பிடித்துக் கொண்டார். ''எக்ஸலண்ட் ஜாப் மிஸ்டர் விவேக்... சென்னை போலீஸுக்கே தெரியாமல்



தீவிரவாதிகளை அற்புதமா வேட்டையாடியிருக்கீங்க. கவர்னர் இப்போ எங்கே...?''

''கூடலூர் கெஸ்ட் ஹவுஸிலிருந்து ஹெலிகாப்டர் மூலமாய் கோவைக்கு கிளம்பிக் கொண்டிருப்பார்...''

விஷ்ணு குறுக்கிட்டான்.

''பாஸ்...! அந்த நவீன பாண்டவர்கள் உங்களுடைய கற்பனையாய் இருந்தாலும் என்னோட மனசுக்குள்ளே சிம்மாசனம் போட்டு உட்கார்ந்துட்டாங்க. அதனால...''

''அதனால...?''

''என்கூட இன்னும் ஒரு நாலு பேரையும் சேர்த்துகிட்டு இயக்கத்தை ஆரம்பிச்சுடலாம்ன்னு இருக்கேன்...''

''நல்ல காரியம்தான் விஷ்ணு...! ஐ அப்ரிஷியேட் யூ! இன்னிக்கே ஸ்டார்ட் பண்ணு. இந்த சமுதாயத்தில் உலா வரும் நச்சரவங்களை நசுக்க உன்னைப் போன்ற இளைஞர்கள் முன்வர வேண்டும். நீ எடுத்த முடிவை பாராட்டும் வகையில் உன்னோட கைக்கு ஒரு ப்ராஸ்லட் போடலாம்ன்னு இருக்கேன்...''

''தாங்க்யூ பாஸ்...''

''பட், ப்ராஸ்லட் தங்கத்துல இருக்காது...''

''பின்னே பாஸ்...?''

''இரும்புல...''

**(முற்றும்)**

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில் அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி. அசோகன். முகவரி: 352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: ஜி. அசோகன். தொலைபேசி: 28544294